பச்சை நாவி, மூன்று பலம், கெந்தகம் ஒரு பலம், எலுமிச்சம் பழச் சாறு வார்த்து இரண்டு நாள் இரண்டு ஜாமம் அரைத்து வெயிலிலே வைத்து கலசத்தில் இட்டு மூடி சீலை மண் செய்து குழி நெல்லிக் குழிக்குள்ளே வைத்து மேலே மணல் கொண்டு மூடி ஐந்து எரு முட்டை கொண்டு மூடி புடமிட்டு எடுத்து குன்றியில் பாதி இள வெந்நீரில் கொடுக்க நவ சுரமும் நிற்கும்.

சீத சுரத்துக்கு:-

சுருசு ஒரு பலம், இரசம் அரை பலம், சாதிலிங்கம் ஒரு பலம், கடுகு ரோகணி அரை விராகனிடை, அபினி கால் பணவிடை, நேர்வாளம் இவை மத்தை யிலை சாறு வார்த்து அரைத்து ஒரு ஜாமம் செல்ல அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சி சாற்றிலும் எலுமிச்சம் பழச் சாற்றிலும் இட குளிர் வெப்பு நிற்கும்.

முதியார் குளிகை:-

முந்திரிகை பழம், பேரிச்சம் பழம், ஏலம், அதிமதுரம், கடுகுரோகணி, சந்தனம், இருவேலி வேர், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், சர்க்கரை, இலுப்பை பூ, திப்பிலி, தேவதாரம் இவை தம்மை ஒக்கக் கொண்டு முலைபால் பூசனிக் குடல் சற்று கருப்பஞ் சாறு இவை அரைத்து சுண்டக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு வாத சுரத்துக்கு ஒரு உருண்டை முலைப் பாலில் ஆகுதல், புழுக்கின இளநீரில் ஆகுதல் இடவும். சன்னி வாதத்துக்கு பூசனிக்காய் குடல் சாற்றிலாகுதல், அகத்தி பழுப்பு சாற்றிலாகுதல், முலைப் பாலிலாகுதல் நசியும் பண்ண ஜன்னி வாதம் நிற்கும்.

சுர உருண்டை:-

நவாச்சாரம் சவுக்காரம், நேர்வாளம் இவை கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்துகுன்றி பிரமாணம் உருண்டை பண்ணி இளவென்னீரில் இட சுரம் நிற்கும்.

மிரண வாதத்துக்கு ரசம்:-

ஒரு பலம் கெந்தகம் ஒரு பலம் பச்சை நாபி ஒரு பலம், ஊமத்தம் விரை ஒரு பலம், வெங்காரம் ஒரு பலம், மிளகு, திப்பிலி ஆறு இவை எலுமிச்சம் பழ சாறு வார்த்து அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி பூசினியிலும் ஒரு உருண்டை இஞ்சி சாற்றிலிட மிரண வாதம் நிற்கும்.

வாத சுரத்துக்கு குளிகை:-

அபிரக்சி செந்தூரம், சாதிலிங்க காரிய சூரணம் இவை தன்னில் ஒக்கக் கொண்டு எலுமிச்சம் பழ சாறு வார்த்தரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி சீனியிலும் முலை பாலிலும் ஒரு உருண்டை இட வாத சுரம் நிற்கும். இதுக்கு குடிநீர் மருந்தானி வேர், விஷ்ணு காந்தி, ஆடாதோடை இவை தன்னிலொக்கக் கொண்டு இரு நாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி கொண்டு சர்க்கரையும் தேனும் கூட்டி கொடுக்க வாத சுரம் நிற்கும்

சீத சுரத்துக்கு:-

சாதிலிங்கம் ஒரு பலம், வெள்ளை பாஷாணம் 1 பலம், துத்தம் ஒரு பலம், துருசு ஒரு பலம் இவை ஊமத்தையிலை சாறு வார்த்து அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்து ஒரு உருண்டை கருப்பு கட்டியும் இதுக்கு குளிர்ந்து வருகிற ஒன்றை விட்டு ஒரு நாள் வருகிற சுரம் இதுவெல்லாம் நிற்கும். இது கை கண்டது.

துக புஷ்லாதிரு குளிகை:-

இலுப்பை பூ, கழஞ்சு, திப்பிலி ஒரு பலம், நேர்வாளம்.உ, செங்கழநீர் கோஷ்டம் ச பலம், மஞ்சிட்டி கடுகு ரோகணி 1/4 இவை பொடி செய்து இலுப்பை பூ முன்னுழி இதுக்கு ஆறு நாழி தண்ணீர் வார்த்து முந்தின மருந்துடன் உரிய நிறைய காச்சி பிழிந்சு கொண்டு சீலை வடி கொண்டு இந்த நீர் வார்த்து அரைத்து சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி, வைத்துக் கொண்டு முலைப்பால் புழுக்கின இளநீரில் இரண்டு உருண்டை அரைத்து சர்க்கரை மோர் பொடி இட்டு கொடுக்க இதுக்கு பித்த சுரம், தாப சுரம் சன்னி வாத சுரம் இவை நிற்கும். இவை கை கண்டது.

அமுர்தாதிக் குளிகை:-

ஏலம்.உ, இலவங்கம்.2, அதிமதுரம்.உ, ஒரிலை தாமரை வேர் இரண்டு பலம், பர்பாடகம் இரண்டு பலம், சாஸ்த்திர பேதி இரண்டு பலம், சந்தனம்.உ, செங்கழுநீர்

கிழங்கு இரண்டு பலம், கோரோசனம் இவை இள நீர் வார்த்து அரைத்து இரண்டு குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி புழுக்கின இளநீரிலே சர்க்கரையும் கூட்டி இரண்டு உருண்டை இடவும். இதற்கு உழலை தண்ணீர் தாகம் தேக சுரமும் நிற்கும்.

இதற்கு குடிநீர்:-

கொத்தமல்லிகை ஒரு பலம், சுக்கு ஒரு பலம், பூசனித் தண்டு ஒரு பலம், இவை நறுக்கி இரு நாழி நீர் வார்த்து உழக்காய் காய்ச்சி கொடுக்கவும்.

இதுக்கு பத்தியம் பொரியைக் கூழாக்கிக் கொடுக்கவும்.

சீத_மஞ்சரி_குளிகை:-

நொச்சிக் கொழுந்து ~~ஒரு பலம்~~ இருபலம், வேப்பங் கொழுந்து ஒரு பலம், நெல்லிக்காய் கெந்தகம் இரண்டு பலம், அரிதாரம் இரண்டரைப் பலம், மிளகு ஒரு பலம், இந்துப்பு ஒரு பலம் இதைப் பசுவின் நெய் வார்த்தரைத்து மிளகுப் பிரமாணம் உருண்ட பண்ணி நிழலில் உலர்த்தி வைத்து தாப சுரத்துக்கு புழுக்கின இளநீரில் இவை பெற்று தேறனிலிட தாப சுரம் நிற்கும். சீத சுரத்துக்கு இஞ்சிச் சாற்றிலாகுதல் கஞ்சாங் கோரை சாற்றிலாகுதல் கொடுக்க சீத சுரம் நிற்கும்.

தக_தீத்தக்_கொடு:-

இந்துப்பு, சாதிலிங்கம், பச்ச நாபி, திப்பிலி, உதரி மான், மங்கவிரை ஒக்க நிறுத்தி கற்பஞ் செய்து பஞ்சாங்கம் வார்த்தரைத்து இஞ்சி சாற்றிலிட பஞ்சாங்கமே சுரம் மாறும்.

பஞ்சாங்கத்துக்கு_மருந்து:-

ஆடாதோடை, கஞ்சாங்கபி காறு, பொடுதலை, கைய்யாந்த கரை, பாகலிலை இவை சமன் கொண்டு சாறு பிழிந்து அரைத்து கடுகு போல் உருண்டை செய்து இஞ்சி சாற்றிலிட சுரம் நிற்கும். இதுக்கு பத்தியம் பாலும் சோறும்.

தாபச்_சுரத்துக்கு:-

சாஸ்திர பேதி, கல்நார், பூகம், அதிமதுரம் இவை முலைப் பாலில் அரைத்து கொடுக்க தாக சுரம் நிற்கும்.

தாக_சுரத்துக்கு_குளிகை:-

முள்ளிலவன் பிசின் ஒரு பலம், இலுப்பை பூ இரண்டு பலம், சாஸ்திர பேதி ஏலம்.1, இலாமிச்ச வேர்.1, லவுங்கம்.1, வெட்டி வேர்.1, சந்தனம்.1, சர்க்கரை.2 இவை எல்லாம் முலைபாலும் தேனும் விட்டு அரைத்து விளாக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி உருண்டையில் இரண்டு புழுக்கின இளநீரில் சர்க்கரையும் கூட்டி கொடுக்க தாக சுரம் நிற்கும்.

சுர_உருண்டை:-

எலிப் பாஷாணம், ~~பொன்னரிதாலம்~~ பொன்னரிதாரம், நேர்வாளம், கடுகுரோகணி, கெந்தகம், தாரிசு, மடல் துத்தம் இவை சமன் கூட்டி பொடி செய்து அந்தப் பொடியை ஒன்று பாதியாக பிரித்து பாதியில் நொச்சிச் சாறு வார்த்து அரைத்து குன்றி பிரமாணம் உருண்டை செய்து நொச்சிச் சாற்றிலிட சீத சுரம் நிற்கும். மற்ற பாதியையும் முருங்கையிலை சாற்றில் அரைத்து குன்றியளவு செய்து உலர்த்தி கீழா நெல்லிச் சாற்றில் சமுலங் குடி நீரிட்டு ஒரு உருண்டையிட தாக சுரம் நிற்கும். இதுக்குப் பத்தியம் முருங்கையிலை சாறும் பாலும்.

ஆனந்த_வயிரவன்:-

கெவுரி பாஷாணம், சிறுக்கீரைச் சாற்றில் புடமிட்டு பின் புட சுண்ணாம்பு நீரில் புடமிட்டு எடுத்து முலைப் பாலில் அரைத்து சிறு பயறு அளவு செய்து ஒரு உருண்டை இஞ்சிச் சாற்றிலிட குளிர் வெதுப்பும் மாறும். பத்தியம் பால் தச்சி கொடுக்கவும்.

<u>இரவு மத:-</u>

பச்சை நாபி, சாதிலிங்கம், வெங்காரம், மிளகு, திப்பிலி இவை சமன் கொண்டு எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை செய்து நிழலில் உலர்த்தி சுரத்துக்கு வயறு கழிஞ்சால் தேனிலிடவும். வயறு நொந்தால் இஞ்சி சாற்றிலிடவும். இருமலுக்கு குடல் தீ பனத்துக்கும் மிளகு பொடியுடனே இடவும். குளிருக்கு சுக்கும் பழ சாற்றிலிடவும். சுரம் நிற்கும்.

<u>சுர உருண்டை:-</u>

கஞ்சா விரை.2, அரிதாரம் ஒரு பலம்., மடல் துத்தம்.1, துரிசி.1, எலி பாஷாணம்.1, பிராய் வேர் பொடி.1 இலை கள்ளி வேர்ப் பொடி.1 இவை ஊமத்திலை சாறு வார்த்து அரைத்து குன்றி பிரமாணம் குளிகை செய்து உலர்த்தி ஒரு உருண்டை வெள்ளாட்டுப் பாலில் இட சுரம் நிற்கும். பத்தியம் முல்லிக்காய் முருங்கக் காயிலை ஆகும்.

<u>பிறவாப்பு குளிகை:-</u>

எலிப் பாஷாணம் அரக்கு பொன்னரிதாரம், மடல் துத்தம், கஞ்சா விரை; பிருய் வடக்கு போன வேர்ப் பொடி இவை சமன் கொண்டு பேய் கருப்பன் சாறு விட்டு அரைத்து குன்றி பிரமாணம் குளிக்க செய்து பாலில் ஆகுதல் கருப்பு கட்டியில் ஆகுதல் மிளகிலாகுதல் பாக்கு வெற்றிலையில் ஆகுதல் இட சுரம் நிற்கும்.

<u>மார்த்தாண்ட குளிகை:-</u>

பச்சை நாபி, வெங்காரம்.2 பலம் இந்தரூம் மூன்று பலம், சாதிலிங்கம் ½ பலம் இவை எலுமிச்சம் பழ சாறு வார்த்தரைத்து ஒரு ஜாமம் செல்ல அரைத்து குன்றி பிரமாணம் உருண்டை செய்து உலர்த்தி ஒரு உருண்டை முலை பாலிலுரைத்து இட சுரம் நிற்கும்

<u>ஸ்ரீராம பாணக்குளிகை:-</u>

கந்தகம், திருகு. அரிதாரம், இரசம், வெள்ளைப் பாஷாணம், வெங்காரம், இந்த மருந்து சரி ஒக்க கட்டி நிலப் பாகலிலைச் சாறு வார்த்து அரைத்து சிறு பயிறளவு மாத்திரை செய்து தக்க அனுபானங்களில் கொடுக்கச் சகல சுரங்களும் சன்னிகளும் தீரும். பத்தியம் காக்கவும்.

<u>(வேறு) சன்னிக்கு வீர பத்திர குளிகை:-</u>

எலிப் பாஷாணம் இருபத்தொரு நாள் எருக்கிலைப் பால் குத்தி வெய்யிலிலே ஒருஜாமம் செல்ல ஊற வைத்து எடுத்துக் கொண்டு எலிப் பாஷாணம் இரண்டு பலம் இரதம் ஒரு பலம், சாதிலிங்கம் ஒரு பலம், கெந்தகம் ஒரு பலம் இவை இஞ்சிச் சாற்றில் அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொண்டு நாக்கு கறந்து உலந்திருக்கிற ஜன்னிக்கு முலைப் பால், சந்தனம், கலைந் கொம்பு, திப்பிலி இவை கூட்டி ஒரு உருண்டையும் முலை பாலிலிடவும். அவத்த ஜன்னி, செவி கேளாமல் வாய் பேசப் போகாமல் நாக்கு குளறின ஜன்னிக்கும் சிலேற்பமம் கட்டின ஜன்னிக்கும் இதக்கும் திப்பிலியும் ஒரு உருண்டையும் முலைப் பாலில் இடவும். புகையும் திப்பிலியும் ஒரு உருண்டையும் முலை பாலில் இட ஜன்னி மீளும். இதக்கு பத்தியம் கொள்ளுப் பயறு அரிசி பொரித்துக் காய்ச்சி கொடுக்கவும். இதக்கு குடிநீர் பெருவாகை வேர்; பெருங் குமிழம் வேர், கொத்தமல்லிகை சிற்றமல்லி வேர், பேராமல்லி வேர், வில்வ வேர், முள்ளி வேர் பாதிரை வேர், சிறு வழுதிலை வேர், கண்டங்கத்திரி வேர், பெய்பி மெருட்டி வேர் நெருஞ்சி வேர், ஆடாதோடை வேர் இவை தன்னில் ஒக்க கொண்டு நருக்கி இரு நாழி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி ஒரு உருண்டை கரைத்து திப்பிலி மேற்பொடி தூவி ராத்திரி குடிக்க ஜன்னி பலவும் மீளும்.

<u>விரோசனத்துக்கு:-</u>

நேர்வாளம் கொட்டையும், கடுக்காயும், முதிர்ந்த கள்ளி மரத்தைத் துளைத்து அதிலே வைத்து அடைத்து ஒரு மண்டலம் சென்ற பிறகு எடுத்து உலர்த்தி பொடி செய்து கொடுக்கையில் வைத்து கொண்டு வேண்டின பேரை முகரச். பார்க்க வயறு பேதிக்கும்,

<u>நீர்க் கடுப்புக்கு:-</u>

நெருஞ்சிலே வேண்டி வாய் பேசாமல் பிடுங்கி வந்து வாய் பேசாமல் அரைத்து பசுவின் நெய்யில் குழைத்து உள்ளுக் கொடுத்து தண்டிலேயும் பூச சலம் விடும்.

வெள்ளை சாறனை வேர் பிடுங்கி வந்து குருக நிறுக்கி பசுவின் பாலில் வேக வைத்து பசுவின் பாலில் கொடுக்க உரி மூத்திரம் மூத்திர பாலை கல்லெரிப்பு எல்லாம் போகும்.

(<u>வேறு</u>) கீழா நெல்லியும், கலைங் கொம்பும் பசுவின் பாலில் குடிக்கவும். இரத்தம் விழுந் தால் புள்ளி மான் கொம்பும் கீழா நெல்லியும் பசுவின் பாலில் கொடுக்கவும்.

(<u>வேறு</u>) ரச சுத்தி வெள்ளை பசலை அரிசியில் பொடியிட்டுக் குளிக் கல்லில் இரண்டு சாமம் விட்டு மத்திச்சு ஊதிப் போடவும். மஞ்சள் பொடியில் மத்திச்சு மத்திச்சு ஊதிப் போடவும். அமுக்கிரா வேர் பட்டை பொடியில் மத்திச்சு போடவும். அரிசி வடிப் பட்டை பொடியில் மத்திச்சு ஊதிப் போடவும். இரசம் சுத்தியாம்.

<u>பிறமி கற்பம்:-</u>

பிறமியை இடித்துச் சாறு வடி கொண்டு அந்த சாற்றில் நாழியும், நெய் நாழியும் இரண்டும் நாழியாக காய்ச்சி இறக்கி ஆறின பின்பு மிளகு, திப்பிலி, சுக்கு, ஒவ்வொன்றும் கழஞ்சு ஆகப் பொடி செய்து கொதிக்க நெய்யிற் போட்டு கிளறி வைத்து பின்பு இது கொள்ளும் போது நெல்லிக்காய் பிரமாணம் நாள் ஒன்றுக்கு கொள்ளவும். இந்தபடி அறுபது நாள் கொள்ள சயம் பாட வல்லவமாம். தொண்ணூறு நாள் கொள்ள பதினாறு வயது வாலையாகும். பதினெட்டு குட்டமும் தீரும். புருஷன் கொண்டால் திரமுண்டாம். கலியாண புருஷனவான் பெண்சாதி ஆறு மாதம் கொண்டால் பிள்ளையுண்டாம். ஆதிபடைச்சுற்றும்.

<u>சித்திர மூல கற்பம்:-</u>

சித்திர மூலியாவது கொடுவேலி இவை பிடுங்கும் பொழுது இரவு பட்டினி இருந்து அதிகாலமே சரீரம் சுத்தி பண்ணி சிவப்பு சீலை யுடுத்தி கொண்டு ஓம் காசி என்று மந்திரம் சொல்லிப் பூசை பண்ணிப் பின்பு பிடுங்கும் பொழுது சொல்லுகிற மந்திரம் ஓம் மந்திரி சத்தி எரிய நதி ரசத்தி ஆதித்திய சத்தி என்றும் மந்திர ஆகை ஆலை வாச்சத்தி என்னையும் உயக்கிடாயக வாக என்று மந்திரம் சொல்லி சமூலமும் பிடுங்கி உலர்த்திப் பொடி செய்து தேனாகுதல் நெய்யாகுதல் கூட்டி எ. வா-நிருத செம்பி வைத்துத் தனக்கு பொருந்தின நீரிலிலோனும் பண்ணி வடக்கு முகமாக விருந்து ஓம் நமா வென்று நித்தம் ஒரு பலம் பொடி சர்க்கரையுடன் கொள்ள துட்டரோக மாவு குட்டந் தீரும். கு நாள்க் கொள்ளச் சுத்தியுண்டாம். ஒரு திங்களில் யக.ம் வயது உண்டாம். மூன்று திங்களில் காச்சல் செசுவளம் போவன். ஆறு திங்களில் நினைத்த விடம் போவான். அம விருத்த வெல்லுவான், நீரிலும் நெருப்பிலும் நடப்பான். இந்த மருந்து கொள்ளும் பொழுது உடம்பில் உப்பு புளி என்னை சுண்ணாம்பு கழிப் பகுமும் பட என்னைத்-த் உடம்பு எல்லாம் நனைத்து பகல் அசனம்பண்ணி இரவு பட்டினி யிருந்து கோழி கூப்பிடுகிற நேரத்திலே எருமை வெண்ணெ மிதுங்கி விடிந்ததின் பிறகு சிற்று மனக்கு விரை ஒப்பிசசை விரை, ஒரும் உள்ளி தாம் போக்கி வென்னீர் விட்டரைத்து இள வென்னீரில் குடிக்க சீதமுள்பட களியும். இப்பால் முப்பட்ட காரியங் கள் செய்து கொள்ளவும்: சித்திர மூல கற்பம் முற்று பெற்றது.

<u>நீர்த்தி கற்பம்:</u>

சீந்திற் கொடியை சிறுக நறுக்கித் உலைத்து ஒரு மிடாவில் தண்ணீர் விட்டு ஊறப் போட்டு நன்றாக பிசைந்து நீர் வற்றிப் போட்டு இப்படி நாலு பிறகாரம் ஆறு பிறகாரம் கழுவி போட்டால் அடியிலே வெள்ளைக்கல் (பூராகு) உறைந்திருக்கும். அந்த பொடி அ கடுக்காய் பொடி ¼ தான்றிக்காய் பொடி ¼ அக்க கோலப் பிசுருப்பு ¼ இன்பூரல் வேர் பொடி ¼ இவை பலங் கொண்டு நிறுத்து கூட்டிக் கொள்ளக் கையாந்த கரை சாறு வார்த்து அரைத்து பசரி உலர்த்திப் பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி ஒரு புதுப் பானையில் இட்டு வைத்துக் கொண்டு சரீர சுத்தி செய்து கொண்டு தனக்கு பொருந்தின நாளில் விநாயகர் பூசை பண்ணி யோகினி பூஜை பண்ணி இந்தச் சூர்ணம் தேனில் கலந்து கொள்ள அறுபது நாளில் நரை திரை மாறும். குட்ட ரோகம், மற்றுள்ள வியாதி எல்லாம் தீரும். காயம் பச்சை மூங்கிப் போலாம். இருபது வயது புருஷன் ஆறு மண்டலம் கொண்டால் சிவத்திலே

வெள்ளி சுறுக்கும் பத்து மண்டலங் கொண்டால் அட்டமா சித்தியாம். சொன்னது கேட்கும்.
சிவத்தலே கழஞ்சு இரசம் சட்டியில் விட்டு உருக்கும் பொழுது பஞ்ச வேகமும் பழுக்கச் சிந்தி
கற்பம் முற்றும்.

கொறுக கற்பம்:-

சாயவேர் பொடி.உ, கடுக்காய் பொடி.உ, தானிக்காய் பொடி.உ, நெல்லிகாய்
பொடி.உ, வெருகங் கிழங்கு பொடி.உ, சீந்தில் கொடி பொடி.உ, இவை தண்ணீரில் ஒக்க
கொண்டு பொடி செய்து வஸ்திர காயம் பண்ணித் தமச் சட்டியில் இட்டு முருக்கு மரத் தண்டு
நறுக்கி கையாந்த கரை சாறு விட்டு கடைந்து வெய்யிலில் வைக்கவும். இப்படி பதினைந்து
நாள் கடைந்து வைக்கவும். இந்த பொடி வெரு கடி பிரமாணம் கொள்ளவும். அந்திக்கு பசுவின்
நெய்யில் கொள்ளவும். இதக்கு பூசனிக்காய் கறப்பு புளிப்பு தவிர்க்கவும். ஒற்றிருபது
நாள் கொள்ளவும். வெய்யிலிக் காற்றுபடாமல் சட்டை போட்டு இருக்கவும். முவ்வாயிரம்
வருடம் இருப்பான், இகார கற்பம் முற்றும்.

கோடா குளிக் குளிகை:-

இரசம் ஒரு பலம், பச்சை நாபி ஒரு பலம், அரிதாரம் ஒரு பலம், கெந்தகம்
ஒரு பலம், கடுக்காய் ஒரு பலம், தானிக்காய் ஒரு பலம், நெல்லிக்காய் ஒரு பலம்,
திப்பிலி ஒரு பலம், திரிகடுகு ஒரு பலம், இருபி ஒரு பலம், மனோசிலை ஒரு பலம், நேர்
வாளம்.யுஉ இவை எல்லாம் கையாந்த கரை சாறு வார்த்து அரைத்து நாள் ஒன்றுக்கு
புத்த நாழிகை அளவு அரைத்து இப்படி நாலு நாள் அரைத்து உளுந்துப் பிரமாணம் உருண்டை
பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதிலொரு உருண்டை பசுவின் மோராகுதல்
ஈச்சங் தாய் சாற்றிலாகுதல் இடக் கிருமி தீரும். விளக் கெண்ணெயில் வயிறு பேதிக்கு பண்ணி
பின்னை இந்தப் படி அவுடதம் அநுப்பானங்கூடனே வியாதிகளுக்கு இடவும். எலுமிச்சம் பழச்
சாற்றில் இட விடம் மீளும். இஞ்சி சாற்றிலிட தேள் விடம் மீளும். பசுவின் நெய்யில் இட
வாதம் மீளும். பசுவின் பாலில் ஆகுதல் கையாந்த கரை சாற்றிலாகுதல் சுரம் போம். உழ
தீரும். வெள்ளாட்டு பாலில் இடக் கல்லெரிப்பு தீரும். எலுமிச்சம் பழ சாற்றிலிட காசம்
போம். நெல்லிக்காய் சாற்றிலிட தாக சுரம் போம். கருப்பு கட்டியில் இட வெப்பாலை தீரு
சீனி சர்க்கரையில் இட பித்தம் போம். பழம் புளியில் இடச் சுரம் போகும். திப்பலி கடுக்
காய் தானிக்காய் நெல்லிப் பட்டை இவை எல்லாம் பொடி செய்து இட சர்வ வாதமும்
போகும். வெற்றிலையில் இட சரீரம் அழகுண்டாம். தேனில் சரீரம் தாளிக்கும். திரிகடுகு
வங்கமும் கூட்டி இடகுலைவலி போம். குன்றி சாற்றிலாகுதல் எலுமிச்சம் பழ சாற்றிலாகுதல்
விடம் மீளும். முருங்கை சாற்றிலாகுதல் பசுவின் நெய்யாகுதல் இட குலை வலி போகும்.
தயிரில் இட அஜீர்ணம் போம். தண்ணீர் விட்டான் கிழங்கு சாற்றிலிட நீர் கடுப்பு நிற்கும்.
நெல்பொரியில் இட கெர்ப்பமுண்டாம். சித்திரமூலக பசுவின் நெய்யிலிட விடம் தீரும்.
வசம்பிலிட வாயு நடுக்கந் தீரும். கோமுத்திரத்திலிட கிரந்தி போம். இலவாக பட்டைச்
சாற்றிலிட வீக்கம் போகும். பழந் தண்ணீரிலிட படர் தாமரை போம். நல்லெண்ணெயில்
உரைத்து நிமையிலும் நெற்றியிலும் இட கண்ணேக்காடு போம். பாக்கு வெற்றிலையிலிட அஜீ
ரணம் போம். காடி புள்ளி குக்கில் பசு வெண்ணெயில் கூட்டி பின்னை பெத்தப் பிரசவ வலிக்கு
இது போம். வசம்பு, கோஷ்டம், பெருங்காயம், இந்துப்பு, அசமதாகம் இவை தன்னிலொக்க
கொண்டு பொடி செய்து எருக்கலம் பாலில் கூட்டி இட சர்வ வாதமும் போகும். செண்பக
பூவில் கொடுக்க உடம்பு நாற்றம் போம். வாய் நாற்றம் போம். கருங்காலி விரைத்
தயிலம் இறக்கிட நீரழிவு தீரும். பாக்கில் கொடுக்க நீர் கடுப்பு தீரும். எலுமிச்சம் பழச்
சாற்றிலுரைத்து கண்ணிலிட மாசாட்டம் போம். கருப்பு கட்டியில் கொடுக்க கண்டம் சுத்தியாம்.
பழந் தண்ணீரில் கொடுக்க கண் மாசாட்டம், போம். கடப்பங் கொட்டையில் உரைத்து கூட்
டியிட கமைத்த கண்ட மாலை தீரும். ஜாதிக்காயில் கொடுக்க மூல வியாதி போம். மரசம்
பட்டை சாற்றில் கொடுக்க செவ்வட்டைக் கடி போம். மருள் கிழங்கில் கொடுக்க வெண்
குஷ்டம் போகும். சந்தனத்தில் கொடுக்க பெரும்பாடு போம். கொட்டை கரந்தை சாற்
றில் கொடுக்க மருந்தீடு போம். பூவரசம் விரையிலும் கருப்பு கட்டியிலும் இட மருந்தீடு

போம். ஆனக் கட்டு போம். சந்தனத்தில் கொடுக்க வெள்ளெடுப்பு தீரும். வயறு கழிச்சலுக்கு விளுவிழும் மகிழம் கொழுந்து காச்சித் தண்ணீரும் இட ஆற மாத்திரையில் வயறு கடுப்பு தீரும். மேல் மூச்சுக்கு ஆடாதோடை யிலை நொச்சி யிலை புட்டு கட்டி எடுத்துப் பிழிந்து கொண்டு அதிலே ஒரு உருண்டை இட நிற்கும். இருமலுக்கு தூதுவளையிலை குன்டெலை சங்கிலை முருக்கிலை ஆடாதோடை செம்முள்ளி யிலை இவை எல்லாம் விட்டு கட்டி பிளிந்து அதிலே ஒரு உருண்டை இட நிற்கும். மூல வியாதிக்கு மூலங் கிழங்கு தண்ணீரிலிட நிற்கும். தூதுவளையிலை இன்ப்ூரல் ஆடாதோடை இலை, செம்முள்ளி இலை, நொச்சி யிலை எருக்க இலை, அத்தினையும் ஒவ்வோர் பிடியாக் கொண்டு பொரு பொருவை வச்சென வத்துப் பிழிந்து சாத்தி வைத்து வெதம் விதிப்பாதப் கொடுங் குளிகை மிக அரைத்துத் திப்பிலி மேல் பொடியும் தூவி கொடுக்க உளமாந்தை, காசம் போம். வாத சிலேத்தும வாய்வு எல்லாம் தோடா குளி மருந்து தானே இது வெல்லாம் சுத்தி பண்ணித் திங்களக்கிழமையிலே காலமே சுத்தி பண்ணி உபவாசத்தோடே இருந்து கையாந்த கரை சாறு விட்டு நாள் ஒன்றுக்கு பத்து நாளிகை அளவு அரைத்து செவ்வா, புதன், வியாழன், வெள்ளி நாளங்கு நாளும் தினம் இந்தப் படி உபவாசத்துடனே அரைத்து எடுத்து மருந்து சுடாமல் கல்லில் இருக்க விட்டு நாலாம் நாள் உளுந்துப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி எடுக்கவும்.

சுர உருண்டை:-

பொன்னரி தாரம் ஒரு பலம், துத்தம் ஒரு பலம், சருசு ஒரு பலம், கெவுரி பாஷாணம் ஒரு பலம், இரசம் ஒரு பலம் இவை பொன்னூமத்தைச் சாறு ஆழாக்கு சாறு வார்த்தரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி செப்பு வட்டிகையில் உலர்த்தி வைத்து சுரத்தில் வயறு சுனத்திலத்து நொந்து நொந்து கனத்து இருந்தால் அன்று கடைந்த மோரிலே ஒரு உருண்டை இட அம கரத்தில் வயறு கழியாமல் வெதுப்பு பொறுக்க வேண்டினல் ஒரு உருண்டை பழ மோரிலே உரைத்துக் கொடுக்கவும். குளிரும் வெதுப்பும் வந்தால் இள வென்னீரிலே ஒரு உருண்டை உரைத்திட சுரம் நிற்கும்.

தாப சுரத்துக்கு:-

சுத்தம், சருசு, திப்பிலி, நெருவிடம், அரிதாலம், வெள்ளை பாஷாணம். இது தன்னில் ஒக்க கொண்டு ஊமத்த இலை சாறு வார்த்தரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்து ஒரு உருண்டை முலைப்பாலில் இட தாப சுரம் நிற்கும். இதற்கு பத்தியம் பால் கஞ்சியும் சோறுமிடவும்.

தாப சுரத்துக்கு:-

வெள்ளை பாஷாணம் ஒரு பலம், கெவுரி பாஷாணம் ஒரு பலம், துத்தம் அரை பலம், வெங்காரம் பணவிடை இரசம் இவை பாவ இலை சாறு வார்த்து அரைத்து பயறு பிரமாணம் உருண்டை பண்ணி வைத்து ஒரு உருண்டை குளிர்ந்த தண்ணீரிலிட இதுக்கு மறுமம் வென்னீரில் கொடுக்க தாப சுரம் நிற்கும்.

விரோசனத்துக்கு:-

பச்சை நாவி. 1; சாதிலிங்கம். 1, வெங்காரம். 3 நேர்வாளம். 4 பலம் இவை கூட்டி சிறுகீரை வார்த்தரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி வைத்து ஒரு உருண்டை வாழைப் பழத்திலிட வயிறு கழியும். வயிறு வீங்கி கையும் காலும் சால வீங்கி இருந்தால் செருப்படியும் கடுக்காயும் மஞ்சளும் இவை மூன்றும் கூட்டி அவைத்து கோமூத்திரத்தில் பிசைந்து வடித்து கொண்டு முற்பட்ட குளிகை ஒன்று இட வயிறு களிஞ்சு கை கால் வீக்கமும் வாடும். இதுக்கு பத்தியம் மோருஞ் சோறும்.

சீத சுரத்துக்கு:-

அரசம், அமுத்தைச் சாறு விட்டு மத்திக்க நீரும். இந்த ரசம் ஒரு பலம் மனோசிலை ஒரு பலம், கெந்தகம் ஒரு பலம், அரபொடியிலே நாவல் பட்டையும் மருதம் பட்டையும் அவைத்து சாறு கொண்டு அரப் பொடியில் வார்த்து வெய்யிலில் வைக்க பற்பமாம். இந்த பற்பம் ஒரு பலம் இது வெல்லாம் கூட்டி பொடி செய்து ஒரு பணவிடை பொடி மோரில்குதல்

சுக்கு தண்ணீரில் கொடுக்க சித்த சுரம் தீர்கும்.

சுரத்துக்கு நெய்:-

சீதேவியார், செங்கழனீர் சாறு முன்னாழி இதுக்கு பசுவின் நெய் இரண்டு நாழி, இதுக்கு கற்கம், ஏலம், லவுங்கம், அதிமதுரம், சாதிக்காய், இரும்பு, சாஸ்திர வேதி, கொத்தமல்லி, சாதிப்பத்திரி, நாகப்பூ, மரமஞ்சள், சிறுதேக்கு, தேவதாரம், திப்பிலி, கடுகு ரோகணி சந்தனம் பசுவின் பால் இவை

எதிர் கவிகை குணம்:-

வயற்று புத்து குன்மம். இது குணம் செரியாமல் வரும். உடம்பு அசத்தும் மனம் அவன்டும் வரும். விலா புறத்திலே ஊசி இட்டு குத்தினது போல் சிவுக்கு சிவுக்கு என்று நோகும். நீர் கழியும். பின்பு சலம் அடைக்கும். வலப் புற விலாவி நோகும். பெருங்காயம் முன்று பலம், இந்துப்பு முன்று பலம், சுக்கு, மிளகு ஆழாக்கு, கள்ள காலே கடுகு ஆழாக்கு, கல்லுப்பு ஆழாக்கு, வெங்காயம் ஒரு பலம் இவை எல்லாம் பொடி செய்து வெள்ளாட்டு நீரலில் ஒக்கப் போட்டு அரைத்து வைப்பது. நிற்றம் காத்தாலே ஒரு நெல்லிக்காய் பிரமாணம் மருந்து தின்ன என்று கழுகிய தண்ணீர் போல் சலம் கழியும். எதிர் கவிசை முற்று.

பக்க கவிசைக்கு வக்கத்தில் கட்டுவது:-

செங்கொடி வேலி வேர், வசம்பு அரைத்து பூசி திரித் தண்டு நெருக்க கட்ட பக்க கவிசை தீர்கும்.

அகுவைக்கு மேல் கவிசைக்கு:-

இரண்டு பழ விடத் தேங்காய் கொண்டு வந்து உடைத்துத் திருவி பால் பண்ணி இந்த பாலில் கொன்றை கொழுந்து ஒரு பிடி நில ஆவிரை வேர் ஒரு பிடி இது இரண்டும் நருக்கிப் பாலில் போட்டு காய்ச்சி நெய்யாம். அந்த நெய்யை நக்க இடவயிறு கழிந்த மற்ற நாள் வெற்றிலை போல் இருக்கிற எரியால் இலை பறித்து வந்து ஒரு குண்டு வட்டி நிறைய அமுக்கி வயிற்றில் வியாதி இருக்கிற பிறத்தே கவிழ்த்து ஒரு சீலை கொண்டு கட்டி வைக்க அந்த வியாதி கூப்படும். கூப்பிட்டு அமந்து பின் அவிழ்த்து போட்டு இப்படி முன்று நாள் கட்டி அவிழ்த்து போடவும். பின்பு 7 நாழி என்ணெயில் சொதுகத்தாரி வேர், அரிசி வேர், நொச்சி வேர், கொடிவேலி வேர், பிறத் தொலம், கிரா வேர் இவை தன்னில் ஒக்க கொண்டு கோமுத்திரம் வார்த்து அரைத்து நாழி என்ணெயிலே எரித்து பதத்தில் வடித்து வைத்து முன் உவலுக மருந்து கட்டி அன்வது இந்த என்ணை நக்கி வர அகுவை மோக விசை இவை கறஞ்சு போம். இது கை கண்டது.

பொடி:-

நாழி, கள்ளிப் பூ நாழி புதாவல்லி சமூலமும் பொடி, நாழி, மிளகு பொடி, உழக்கு, சுக்கு பொடி, உழக்கு இந்துப்பு, உழக்கு எட்டி காய் நாற் கழஞ்சு வெள் வெங்காயம் உரி இவை எல்லாம் கூட்டி பொடி செய்து அரைத்து சுண்டாங்கி பண்ணி வைத்து நித்தம் தின்ன அகுவை கரையும்.

(வேறு) வயிற்றில் விப்புருதிக் குணம் கண்டால் இரத்தம் விழும். வீக குடந்து உடம்பு வலித்து கீழ் வயிறு முன்னிட்டு குத்தினப் போல் இருக்கும். தலை வலிக்கும். உடம்பு வெதும்பும். மின் னெழி போல் உலைச்சு வலிப்பாயி உடம்பெல்லாம் எழுந்திருக்கும். சோறு வேண்டிஇராது. நித்திரை வராது. ~~இதுக்~~

இதுக்கு மருந்து:-

குப்பை மேனிச் சாறு, சாறணையிலை சாறு, எழுத்தாணி பூட்டுச் சாறு, பேய் கொமட்டிக் காய் விரை வாங்கிப் போட்டு உள்ளில் சதையை இந்த சாற்றில் அரைத்து இதில் ஆழாக்கு கள்ளிப் பால் வார்த்து வசம்பு வெள் வெங்காயம் கூட்டி அரைத்து விளக்கெண்ணெயில் எரித்து முன்று நாள் இரண்டு காசத்தனை என்ணை நக்க வயிற்று விப்புருதி உடையும். சீரிப் புழுவும் விழும். திரு மேனி புழும் விழும். விப்புருதி உடைந்ததன் பிறகு பிசின் பிரண்டை கிழங்கும் காரிப்

பிரண்டை வேரும் ஒரு விளாங்காய் மாத்திரம் அன்ரத்து சுக்கு, மிளகு, வெள் வெங்காயம், கல்லுப்பு இவை தண்ணீரில் ஒக்க கொண்டு ஒரு விளாங்காய் மாத்திரம் அரைத்து சற்று நல்லெண்ணெய் கூட்டி மோரிலே கலக்கி மூன்று நாள் உண்ண மடிவாதம் வயத்திலே விப்புருதி இவை பையோடே விழும்.

ஒடு_விப்புருதிக்கு:-

குமிளம் வேர், பாவட்டை வேர், கொடி வேலி வேர், குரிஞ்சா வேர் இவை தண்ணிலொக்க கொண்டு அரைத்து எருமை பாலிலே சேர்க்கி மூன்று நாள் உண்ண இதக்கு தீரும் வியாதி ஒடு விப்புருதி, வெப்பாவை, நீராமை, பெரு வயறு, வயிற்றிலுண்டான வியாதிகள் எல்லாம் தீரும். இது கை கண்டது.

கரப்பான்_செய்யுங்_குணம்:-

செவ்வாப்பு முற்றிலை கர்ப்பாக்தெள்றிகை இதக்கு குணம். தடை, இடுப்பு, முகம், மெல்லாம் எழுந்து சிவந்து சிவந்து இருக்கும். உடம்பெல்லாந் தடித்திருக்கும். செவ்வட்டை கொடி போல் சிவந்து தடித்திருக்கும். ஒரு இடத்திலே புறப்படு மாப் போலே இருக்கும். கொடி வழுதங்காய் போலே கன்டியிருக்கும். சுற்றே வெதுப்பு வரும்.

இதக்கு_மருந்து:-

கொடிவேலி வேர், முன் காவிலை வேர், சத்தி சாரணை வேர், புளியன்_பிரண்டை வேர், கெல்ல கோவைக் கிழங்கு, குறட்டை கிழங்கு, காட்டு சாரணைக் கிழங்கு, அவுரி வேர், கோழியாவரை வேர், முக்கறட்டை வேர், மிளகறணை வேர், தலைச் சுத்தி வேர், வத்தனம் பட்டை, விழும்பி வேர், கடுக்காய், வசம்பு, வெள் வெங்காயம், இவை கூட்டி இடித்து நெய்யா குதல் விளக் கெண்ணை ஆகுதல் வார்த்து பதத்தில் வடித்து உள்ளுக்கு நக்க மேலுக்கு பூச கரப்பான் தீரும். இது மிதாற்பிலே மிளக்க வேணும். முத்தி நெஞ்சிலே கட்டினால் மீளாது.

இதுவும்_கரப்பானுக்கு:-

வேம்பாடம் வேர், முடக் குருந்தம் பட்டை, வேப்பம் பட்டை, புங்கம் பட்டை உசிலம் பட்டை, கொல்லன் கோவைக் கிழங்கு சிறு குறிசா வேர், வனமாம் பட்டை பொன முசுட்டை வேர், கழச்சி வேர், அவி வேர், முடப் பிட்டத்தி வேர், ட்டை வேர், வெள்ளை காவளை வேர், கருஞ்சூரை வேர் பட்டை செங்கொட்டை வேர், சிற்றவரை வேர், வசம்பு, வெள் வெங்காயம், சாதாளம் கருஞ்சீரகம், பூதாவிருக்கம், குங்குலியம், வெள்ளிச்சிப் பிசின், கத்திரி மஞ்சள் இவை தன்னில் ஒக்க கொண்டு நறுக்கி விளக் கெண்ணெயில் எரித்து இந்த எண்ணை உள்ளுக்கு நக்கி மேலும் பூச கரப்பான் தீரும். புண்ணுதம் தீரும்.

கரப்பானுக்கு:-

மாதலை வேரும், சிறு வரைக் கிழங்கும், செண்பகவி வேரும், பசுவின் நெய்யில் எரித்து நக்க இட்டு மேலும் பூச கரப்பான் தீரும்.

குடல்_வாதத்துக்_குணம்:-

ஒரு பிச்சதை ஏர் பற்றி வலிக்கும். இரக்க பற்றி இசிஞ்சாப் போல் வலிக்கும். கீழ் வயறு பொறமும். வயறு கள கள வென்று மின்னி மினித்தாப் போல் வயற்றை எங்கும். பொந்தும். உவழ்க்கும். சோறு செரியாது. தாகமில்லை. தலை நருக் கென்று நோகும். காலோஞ்சுருக்கும். இடது புறத்து புறங்கால் ஒஞ்சுருக்கும். இதுக்கு சூடு இடது புறங் காலில் சிறு விரலில் மொழியில் நரம்பில் ஒரு கோல் வைக்கவும். வலது பக்கத்தில் அரையில் நாடியில் மொழியில் ஒரு கோல் வைக்கவும். குடல் வாதம் மீளும்.

இதுக்கு_மருந்து:-

ஆடு தின்னா பாலை இலை குறவை அரிசியில் இடித்து களி கிளறி எலுமிச்சங்காய் அளவு தின்ன கருப்பு கட்டி நெய் பருப்பு பொடி செய்து சாறணை இலை சாற்றில் பிசைந்து கலத்தில் தப்பி வெய்யிலில் வைத்து சீலையில் இட்டுப் பிழிய எண்ணை போல் விழும். இந்த தைலத்தை வெற்றிலையில் தடவித் தின்ன குடல் வாதம் பொரி வாதம் மீளும்.

<u>இறவும் குடல் வாதத்துக்கு:-</u>

நல்லெண்ணெய் வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய் விளக்கெண்ணெய் இதங்கை யிலை முதியார் கூந்தல் விழுதி யிலை, கொடிக் கவழல் யிலை, முடக் கொற்றான் யிலை, புங்கன் கொழுந்து சாறணையிலை மாவிலிங்க யிலை, முருங்க யிலை, நொச்சியிலை இவை ஒவ்வொன்றும் ஒரு பிடி அளவு கொண்டு கழல் மணி பருப்பு வெள் வெங்காயம் நாழி, பெருங் காயம் கு, இந்துப்பு கு. பலம், திப்பிலி மூன்று பலம் இவை எல்லாம் சாறணை சார் வார்த்து அரைத்து ஐந்தெண்ணெய் கூட்டி எரித்து பதத்தில் வடித்து நக்க. குடல் வாதம் தீரும்.

<u>அமுத சர்க்கரை சூரணம்:-</u>

அமுத சர்க்கரை, விலாமிச்சம் வேர், அமுக்கிறு வேர் இருவேலி வேர், நெருஞ்சி வேர், செப்பு நெருஞ்சி வேர், நன்னாரி வேர், முத்த காசு, தாமரை வளையம், மருதில் பூ, உலகந்தரும் ஆவாரை வேர் பட்டை இதின் பூவுங் கொழுந்தும் விரையும் ஆலம் விரையும், முசுட்டை விரை, அத்தி விரை இவை தன்னில் ஒக்க கொண்டுஒரு கூறு அமுத சர்க்கரை, சீரகம், கருஞ்சீரகம், தாளிசப் பத்திரி, கோஷ்டம், திரிகடுகு, திரிபலம், ஓமம், ஏலம், அரேணுகம், முந்திரிகை பழம், பேரீச்சம் பழம், குங்குமம், நாகப்பூவு ஜாதிக்காய், சந்தனம், கற்பூரம், அதிமதுரம், கற்கடக சிங்கி, இவை தன்னில் ஒக்க பொடி செய்து முன் சொன்ன வேர் விரை உள்ளதகளை வடி கொண்டு சீந்திப் பொடி ஒரு கூறும் கண்ட சரக்கு பொடி ஒரு கூறும் வேர் விரையும் கூட்டி பொடி செய்து ஒரு கூறும் ஆக மூன்றும் இதுக்கு சரி சர்க்கரை கூட்டி கலந்து வைத்துக் கொண்டு இது நாள் காயத்துக்கு தேனிலும் இளச் சரீரத்துக்கு நெய்யிலும் ஒரு வெருகி கடி பிரமாணம் கொள்ள தீரும் வியாதி காமாலை, பூாண்டு ரோகம், கருங்குட்டம், ரெத்த பித்தம், கால் கை எரிப்பு, பிரமியம் நீர் கடுப்பு, உடம்பு கடும் இவை எல்லாம் தீரும். இது கை கண்டது.

<u>சீதேவியார் செங்கழு நெய் நோவுக்கு:-</u>

சீதேவியார் செங்கழுநீர் வேர் பலம் இருபத்தி நாலு, பொன்னாங்கன்னி வேர் கற்றாளை வேர், இலாமிச்சம் வேர், வெட்டி வேர், நீர்பூலா வேர், குன்றி மணி வேர், சந்தி வேர், செங்கழு நீர் கிழங்கு, தாமரை வளையம் ஆக இவை வகைக்கு பலம் ஐந்துமாக கூட்டி இடித்து இரு நாளி நீர் விட்டு குருணியாக காய்ச்சி பிசைந்து வடித்து இதுக்கு கற்கம் ஏலம் இலவுங்கம் செண்பகப்பூ, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம், இலாமிச்சம் வேர், ~~சந்தனக் காசு~~, முத்தக் காசு, கடுகுரோகணி நாகப்பூ, நன்னாரி வேர், இவை வகைக்கு பலம் மூன்று கொண்டு முந்தின கசாய நீர் வார்த்து அரைத்து கரைத்து இதிலே பசுவின் நெய் நாழி புகட்டி எலுமிச்சம் பழச் சாறு மூன்று படி புகட்டி மூன்று நாள் வெந்து மெழுகு பதத்தில் வடித்து தலைக்கு வசித்து கட்டி தலை நோவும் மண்டை வியாதியும் தீரும்.

<u>வியாதி பலதுக்கும் நெய்:-</u>

நாவல் பட்டை பலம் அறுபது உலர்த்தி பொடித்து இரு நாளி நீர் விட்டு கசமறு பாகமாக காய்ச்சி பிசைந்து சீலை வடி கொண்டு இதுக்கு கற்பம் அதிமதுரம், வெள்ளி பா யாத்திரம், இலவம் பிசின், தாமரை வளையம், செங்கழு நீர் கிழங்கு, முந்திரிகை பழம், பேரீச்சம் பழம், வெட்பாலை அரிசி, கார்த்திகைப்பூ, கண்ட சக்கரை விளாவரிசி, மாதளை பிஞ்சு, பங்கம் பாலை வேர், முத்தக் காசு, ஓமம், மாங்கொட்டை, நாவல் கொட்டை கொட்டி கிழங்கு பன்றி மோத்தான் கிழங்கு விளாம்பிசின் வறள் தண்டில் இவை வகைக்கு பலம் நான்கு கொண்டு அரைத்து கரைத்து நாழி நெய்யும் புகட்டி மூன்று நாள் வெந்து பதத்தில் வடித்து கொள்ள தீரும் வியாதி ரத்த பித்தம், அதிசாரம், பெரும்பாடு வெண்மாசு, எலும்புருக்கி, கிராணி இவை தீரும்.

<u>வியாதி பலதுக்கும் பஞ்ச திரவிய நெய்:-</u>

சித்தாமுட்டி வேர் பலம் இருபத்தி நான்கு இடித்து இரு நாழி நீர் விட்டு நாலிலொன்றாக காய்ச்சி பிசைந்து வடிகட்டி இதுக்கு பெருவாகை வேர் பெருங் குமிழ் பாதிரி வில்வ வேர், கொள்ளு, சிற்றாமல்லி, பேராமல்லி சிறு வழுதிலை, கண்டங்கத்திரி

நெரிஞ்சி வேர் இவை வகைக்கு ஆறு பலம் இடித்து ஊ லி நீர் விட்டு குருனியாக காய்ச்சி பிசைந்து வடித்து /இதுக்கு பசுவின் நெய் நாழி இதுக்கு கற்கம் அரத்தை மரமஞ்சள் மஞ்சட்டி சந்தனம், நன்னாரி வேர், கோஷ்டம், சதகுப்பை இந்துப்பு, செவ்வியம், அகில் சாறணை வேர், அமுக்கிரா வேர், நீர் வள்ளிக் கிழங்கு, பலகோவை கிழங்கு, திரிபலம், ஓமம், ஏலம், இலவுங்கம், கோஷ்டம், பெருங்காயம், கொடுவேலி வேர், செவ்வியம் இவை ஒவ்வொன்றும் மூன்று பலம் கொண்டு முந்தின கசாயம் நீர் வார்த்து அரைத்துக் கரைத்து சதுர கள்ளி பால் உழக்கு கருப்பு கட்டி பலம் ஒன்று, தயிர் நாழி கொமுந்திர நாழி, சானகச் சாறு நாழி, நெய் முன்ய நாழி, கூட்டி கலந்து மூன்று நாள் வெந்து பதத்தில் வடித்து வைத்து ஒரு காசளவு நக்க இதுக்கு தீரும் வியாதி பெருவயறு, வயறு பொருமல், குடல் வாதம், வயிற்று விப்புருதி, உடம்பெல்லாம் வீங்கினது இவை எல்லாம் நிற்கும். மஉறா பஞ்சாங்க கிருதம் முற்றும்.

வேம்பின் கற்பம்:-

வேப்ப மரம் முற்றினது மரத்தின் வேர் ஆழத் தோண்டி நடு விருந்த வேரை நறுக்கி அதின் கீழே பழகின பானையை வைத்து அந்த குளிய மண் கொண்டு மூடி வைக்கவும். அந்த பானையில் தயிலம் இறங்கும். அந்த தயிலத்தில் கடுக்காய் பொடியும் கஞ்சாப் பொடியும் போட்டு பிசைந்து அதில் ஒரு சீப்பு பேயன் வாழைப் பழம் போட்டு வைக்க காயாம். அந்த காயை ஒரு மண்டலம் கொள்ள காயா முத்தியாம். காற்று, வெய்யில் படாமல் கிரமத்துடன் கொண்டு வரவும். பூசா விதி செய்து ~~கொண்டு~~ கொள்ளவும்.

வியாதி பலதுக்கும், தைய்யாந்த கரை என்னை தைய்யாந்த கரை சாறு ஒருணி இதுக்கு கற்கம் வெட்பாலை அரிசி, பெருங் குரும்பை, சிறு தேக்கு, கடுகுரோகணி பெரு மரப் பட்டை, திரிகடுகு, அதிமதுரம், ஏலம், செவ்வியம், பங்கம் பாளை வேர், நற்சீரகம் அசமதாகம், விளச்சி சிறு வசம்பு பெருங்காயம், அத்தி, திப்பிலி சிறுமூலகம் கொடிவேலி வேர், ஆக அவை ஒவ்வொன்றும் மூன்று பலம் கொண்டு அரைத்து கரைத்து நல்லெண்ணை, மூன்று நாழி கூட்டி மூன்று நாள் வெந்து நாலாம் நாள் பதத்தில் வடித்து காசளவு என்னை கொள்ள இதுக்கு தீரும் வியாதி கருப சுத்தி வாதம், சேற்றும விகாரம், இதப்பு சூரையும், குன்மமும், மூல ரோகமும், கிரிமியும் தொஉடிாமாகிய ஜன்னியும் இவை எல்லாம் தீரும்.

அதப்பை நோவுக்கு:-

சருவாங்கமும் வீங்கும்.

இதுக்கு மருந்து: கிரி மூக்கின் கிழங்கு, ஆட்டு கோமயத்தில் அரைத்து குடிக்க வயிறு கழியும். பின்பு பெரும் குறட்டை கிழங்கு வெள் வெங்காயமும் விளக்கெண்ணையில் எரித்து நக்க அதப்பை நோவு வீக்கமும் வாடும். இது கை கண்டது.

பெருந்தலை நோவுக்கு குணம்:-

தலையை நருக்கு நருக்கு என்று நோகும். செவி சில்லென்றயிருக்கும். புருவம் நொந்திருக்கும். நாசியிலே தண்ணீர் விழும். பிடரி சந்து கழுத்து நொந்திருக்கும். கண் விழி யொட்டிருக்கும்.

இதுக்கு மருந்து:- செண்டையுருவி இலை, புரகயிலை, வெள் வெங்காயம், வசம்பு இவை எல்லாம் கூட்டி நருக்கி சிறுநீரில் நசியம் பண்ண பெருந்தலை நோவு நிற்கும்.

இரத்த ரோகத்து குன்மம்:-

மலங் கழியும் போது இரத்தமாய் விழும். கை கால் ஒஞ்சு வரும். உடம்பு வற்றியிருக்கும். ஊண் குறைந்திருக்கும்.

இதுக்கு மருந்து:- புண்ணாக்கிலை ஒரு பிடி பறித்து வந்து வெள் வெங்காயம் சமன் கூட்டி அரைத்து எருமை தயிரில் மூன்று நாள் குடிக்க இரத்த ரோகம் நிற்கும்.

பித்தத்தின் குணம்:-

எதுத்து வரும், தலையை சுழற்றும். பேய் பிடித்தும். கண் மசண்டிருக்கும். கையை கொட்டி பாடுவதும் கண் விழியா தொழிவதுவும், அம்மயை உரத்து வலிப்பதும் வேண்டா

தெல்லாம் வேண்டி கத்துவதும் கையை சரியா நொடிப்பதும் பலவாகப் பிதத்தும். மையை புரையாய மடந்தை நல்லா யிருந்தால் பித்தத்தின் குணமிது.

இதுக்கு_மருந்து:- 23.3.63.

தாழை விழுது சீவிப் போட்டு சிறுசாகப் பிழிந்து அரைத்து பிழிந்த சாறு கொண்டு சர்க்கரை யிட்டு ஆறு நாள் குடிக்கவும். பித்தம் நிற்கும்.

பித்து_பிடித்துவதுக்கு:-

நிலவேர் ஒரு சேரை எடுத்து மண்கழுவிப் போட்டுப் பசுவின் பாலில் அரைத்து ஒரு பச்சை பாக்கு மாத்திரம் கரைத்து சர்க்கரையும் போட்டு மூன்று நாள் குடிக்க பித்தமும் மறுளும் நிற்கும். இது கை கண்டது.

ஊர்க்குருவித் தலையும் தெற்றுன் கொட்டையும் அரைத்து முலைபாலில் குடிக்க பித்தம் தீரும்.

பித்தத்துக்கு பசுவின் பால் நீர் படாமல் கறந்து இதில் நாயுருவி வேர் சிறுக்கீரை வேர், குன்றுமணி வேர் இவை ஒவ்வொன்றும் எலுமிச்சங்காய் மாத்திரம் அரைத்து மூன்று நாழி பசுவின் பாலில் கரைத்து தயிராகத் துவைச்சு மற்று நாள் தடைந்து வெண்ணெ எடுத்து இந்த வெண்ணெயில் ஏலம், லவுங்கம், அதிமதுரம், கோஷ்டம், சாஸ்திர பேதி, இவை சம பாக மாக சர்க்கரையும் மூன்று நாள்குடிக்க பித்த நிற்கும். முத்தின் வாளை வேர் பட்டையும் எருமை மோரும் சர்க்கரையும் மூன்று நாள் குடிக்க பித்தம் தீரும்.

பித்தமாயித் தலை மயிர் கழிகிறதுக்கு தலையை வலிக்கும். மயிர் திறைச்சு போம். கண் மசன்டிருக்கும். நெஞ்சு கனத்திருக்கும். வயிறு எரிக்கும். விழுகிடும். உடம்பு கனத்துத் திமித்து இருக்கும். சொல்லுகிறது செவியிற் புகாது.

இதுக்கு_மருந்து:-

பிறளிக் கொழுந்து ஒரு பிடி, கைய்யாந்த கரை ஒரு பிடி, கடுக்காய் நாலு விரை போக்கிப் பொடி செய்து ஒக்கப் போட்டுக் கோமியத்திலே குடிக்க வயிறு கழியும் நன் றாய் வயிறு கழிற தருவாயிலே வெள்ளையவரை இலையும், பறைத் தோரிலை துவைத்து தலை யிலே பிழிஞ்சு கைய்யிலும் பிழிந்து தேய்க்க பித்தம் வராது.

பித்தத்துக்கு சுரைக் கொழுந்து துவைத்து பசுவின் பாலில் பிசைந்து வடித்துக் கொண்டு சர்க்கரை போட்டு குடிக்க பித்தம் தீரும்.

பித்தமாய்_தலை_மயிர்_கழியிறதுக்கு_என்ணெ_வடிக்க:-

குன்று மணியிலை சாறு புளி இலை சாறு, கற்றாளை வேர் துவைத்து சாறு கொண்டு இவை ஒவ்வொன்றும் நாழி சாறுக கொண்டு செண்பக மொட்டு நெல்லிக்காய் தாமரை வளை யம் செங்கழுநீர் கிழங்கு, சீந்தி தண்டு அதிமதுரம், முத்தக் காசு, நாகப்பூ, தற்கோலம், கோஷ்டம், குடப் பாலை வேர், ஏலம், லவுங்கம், கார்போகரிசி, மரமஞ்சள், தான்றிக் காய், தக்கோலம், அகில் மலை_மஞ்சள், மஞ்சட்டி இருவேலி வேர் இலாமிச்ச_வேர், கண்டி வேத்திரம் இவை ஒவ்வொன்றும் மூன்று பலம் கொண்டு அரைத்து கரைத்து பசுவின் பால் நாலு படி, நீர் பூலாயிலைச் சாறு நாழி இதிலே நல்லெண்ணெ படி நாலு கூட்டி முன்று நாள் வெந்த பதத்தில் வடித்து உடம்பு எங்கு மிட்டு தலைக்கும் அடிக்கடி இட்டு தேய்க்க தலைமயிர் பிரியாது உள் வெக்கையும் பித்தமும் தீரும்.

பித்தத்துக்கு_என்ணெ_வடிக்க:-

சிற்று முட்டி வேர், சீந்திக் கொடி, நன்னாரி வேர், முத்தக் காசு, நெல்லிக்காய் இவை ஒவ்வொன்று இருபது பலம், செண்பகப்பூ, சந்தனம் இருவேலி வேர், இலாமிச்சம் வேர் இவை ஒவ்வொன்றும் இரண்டு பலம் கொண்டு முன் சொன்ன மருந்து இதுவும் ஒக்க கூட்டி இடித்து ஞாணி பதக்கு நீர் விட்டு நாலில் ஒன்றாக காய்ச்சிப் பிசைந்து வடித்துக் கொண்டு இதுக்கு கற்கம் ஏலம், லவுங்கம், நாகப்பூ, பச்சிலை, அதிமதுரம், கடுகுரோகணி, சாதிக்காய், மரமஞ்சள், தற்கோலம், செண்பகப்பூ, செவ்வள்ளிக் கொடி, கத்திரி மஞ்சள்

குங்குமம், சந்தனம், வெட்டி வேர், விலாமிச்சை வேர், நன்னாரி வேர், தாமரை வளையம் செங்கழுநீர் கிழங்கு இவை ஒவ்வொன்றும் ஐ பலம் கொண்டு அரைத்துக் கரைத்து இதிலே நாலு படி நல்லெண்ணெயும் புகட்டி மூன்று நாள் வெந்து நாலாம் நாள் பதத்தில் வடித்துத் தலைகிட்டு தேய்த்து முழுக பித்தம் தீரும்.

பிரமியத்துக்கும். பிரமிய சீழ் விழுகிறதுக்கும். சுறுக்கு சுறுக்கு என்று நோவுகிறதுக்கு மருந்து :-

புளி இலை ஒரு பிடி தண்ணீரில் காய்ச்சி பிசைந்து சீலை வடி கொண்டு இந்த சாறு உழக்கு வெள்ளாடு கருத்த ஆட்டுப் பால் உரியும் கூட்டி சர்க்கரையும் இட்டு குடிக்க பிரமியம் நிற்கும்.

<u>சுக்கில பிரமியத்துக்கு:-</u>

கல்நார், சிறுக்கீரை வேர், சர்க்கரை, சித்தாமுட்டி வேர், சிறுபூளை வேர், கஞ்சாங்கோரை விரை, நீர்முள்ளி வேர், பொன்னுங்கன்னி வேர் இவை தன்னில் ஒக்க கொண்டு பசுவின் பால் வார்த்து அரைத்துக்குடிக்க சுக்கில பிரமியம் நிற்கும்.

<u>சுக்கில பிரமியத்துக்கு நெய் வைக்க:-</u>

செங்கழுநீர் கிழங்கு, தாமரை வளையம், இவை ஒவ்வொன்றும் ஒரு பலம் முந்திரிகை பழம் ஐந்து பலம், அதிமதுரம் ஐந்து பலம், கோஷ்டம் ஒரு பலம், குன்று மணிச் சாறு உரி, பருத்தி யிலை சாறு நாழி, சிறுக்கீரை சமூலமும் துவைத்து பசுவின் பால் வார்த்து பிசைந்து சாறு நாழி, பொன்னுங்கன்னி சமூலமும் துவைத்து பசுவின் பால் வார்த்து பிசைந்து சாறு நாழி முன் சொன்ன மருந்தெல்லாம் இந்த சாற்றில் அரைத்துக் கரைத்து இரு நாழி பசுவின் நெய் கூட்டி மூன்று நாள் வெந்து நாலாம் நாள் பதத்தில் வடித்து நாள் ஒன்றுக்கு முக்கழஞ்சு நெய் நக்கவும். சுக்கில பிரமியம் நிற்கும்.

<u>சுக்கில பிரமியத்துக்கு நெய் வடிக்க:-</u>

ஆமணக்கங் கிழங்கு, பெண் பூவை கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, நெருஞ்சி சமூலமும் சிறுக்கீரை சமூலமும் பொன்னுங் கன்னி சமூலமும் மொசு மொசுக்கை சமூலமும் ஓரிலை தாமரை சமூலமும் தாமரை வளையும், செங்கழுநீர், கிழங்கு, நிலப் பனை கிழங்கு, தாழை விழுது, வல்லாரைச் சாறு ஒரு பிடி சீந்தி தண்டு இவை ஒவ்வொன்றும் பலம் வைத்துக் கொண்டு இடித்து தூளி பதக்கு தண்ணீர் விட்டு நாலில் ஒன்றாகக் காய்ச்சி பிசைந்து சீலை வடி கொண்டு இதுக்கு கற்கம் ஏலம், லவுங்கம், அதிமதுரம், சாதிக்காய், கிராம்பு, செண்பகப்பூ, கோஷ்டம், சந்தனம், இலாமிச்சை வேர், வெட்டி வேர், தேற்றுங் கொட்டை நெல்லி முள்ளி, சாஸ்திர பேதி இவை ஒவ்வொன்றும் மூன்று பலம் கொண்டு அரைத்து கரைத்து மூன்று நாழி பசுவின் நெய் கூட்டி மூன்று நாள் வெந்து நாலாம் நாள் பதத்தில் வடித்து வைத்து கொண்டு நாள் ஒன்றுக்கு மூன்று பலம் நெய் நக்க தேனியும் கண்ட சர்க்கரையும் அமுத சர்க்கரையும் கலந்து நக்க சுக்கில பிரமியும் நிற்கும்.

<u>நாலு நாள் மாறலுக்கு:-</u>

திரிகடுகு நெய்யும் எண்ணெயும் ஒக்க கொண்டு வேக வைத்து வெந்த பிறகு குளிர்ந்த நேரத்தில் மூக்கிலே விடவும். நாலு நாள் மாறலும் மூன்று நாள் மாறலும் சீதசுரத்தையும் மாற்றும். நொச்சிச் சாற்றை மூக்கில் நசியம் பின்னும். கடுகு எண்ணெய விடு. சிவ மரம் அத்தி சாறும் உள்ளி சாறும் விடு. சிவ மரம் சுக்கு உள்ளி நொச்சி சாறு காடி விடு.

கிருவ மரமு மூக்கிலே விடவும். நாலு நாள் மாறல் மூன்று நாள் மாறல் சீத சுரம் இருவெல்லாம் மாறும்.

பெரு வர்த்தத்தின் இலைச் சாறும் நல்லெண்ணெயும் கூட்டி நக்க நாலு நாள் மாறல் தீரும். சிறு தேக்கு முத்த காசு, பற்படாகம், சிறுகாஞ்சொறி ஆடாதோடை, சுக்கு, நில வேம்பு கோஷ்டம், திப்பிலி, முள்ளி வேர், சீந்தி தண்டு, வேப்பன் தோல் குடிநீராக்கி கொடுத்தால் நாலு நாளை மாறல்; மூன்று நாள் மாறல் ஒன்றுவிட்டு ஒரு நாள் வருகிறதும்

விடாமல் வருகிறதையும் விட்டு விட்டு வருகிறதையும் குளிரையும் போக்கும்.

சிறு குறிஞ்சா வேர், சீந்தில் தண்டு, ஆடாதோடை முத்த காசு, கடுக்காய், ஓமம், தோல் சுக்கு, இக்குடிநீர்க்கு மேல் பொடி கண்ட சர்க்கரை இட்டு குடிக்க மாறல் போக்கும்.

சிறு தேக்கு பாலேகா மூலம், கடுக்காய், பற்படாகம், முத்த காசு, சுக்கு திப்பிலிமூலம் பத்தும் இக்குடிநீர் நாலு நாளை மாறல் விட்டு விட்டு வருகுறதும் விடாமல் வருகிறதும் ஜன்னி வாத சுரத்தையும் கன்ன வெதுப்பையும் செக்கும்போக்கும்.

இருக்கு புகை:-

கோழிக் காரமும், கோஷ்டமும், மீரம், வசம்பும், கடுகும், வேப்பம் *ம் விறகிட்டு புகை காட்ட சீத சுரமும், மாறல் வகையும் போகும்.

வேப்ப இலேயும், நாறத்தை இலேயும் உள்ளியுங் கூட்டி கழுநீரில் காய்ச்சி முக்காடு இட்டு ஆவி கொள்ளவும்.

மாறல் வகைக்கு:-

குளிர் வெதுப்புக்கு ஆலம்பால் எருக்கம் பால், அத்திப் பால், வேலிப் பருத்திப் பால் இப்பால்களில் களிப் பாக்கை பிரட்டி வெத்திலேயில் தின்ன நாலு நாள் மாறல் போகும்.

ராம பாணம்:-

இரசம்.2, நாபி.2, கெந்தகம்.1, இலவுங்கப் பட்டை.1, சாதிக்காய் ஆறு மிளகு எட்டு இந்த ஆறு மருந்தும் சூரணம் பண்ணிப் பழச் சாறு வார்த்து அரைத்து நாலு நாழிகை அரைத்து முருந்த ஆறமல் வைத்து கொண்டு குன்றி பிரமாணம் குளிகை பண்ணி முன்று மாதம் போக விட்டு சிலேற்பமு சுரத்துக்கு இஞ்சி சாற்றிலிடவும். காப சுரத்துக்கு பித்தின மிளகு பதினெட்டும் பொடி செய்து ஒரு உருண்டை கூட்டி வென்னீரில் கொடுக்கவும். பித்த சுரத்துக்கு கொத்தமல்லிகைகூட்டி வென்னீரில் கொடுக்கவும். இருமலுக்கு திரிகடுகு கூட்டி தேனில் குழைத்து நக்கவும். இரத்த பிரமியத்துக்கு முத்த காசு, சந்தனம், சர்க்கரை கூட்டி கொடுக்கவும். பெரும்பாட்டுக்கு இப்படிக் கொடுக்கவும்.

இரச மிருகாங்கிஷம்:-

ரசம் எட்டு, நாபி ஏழு, கெந்தகம் ஆறு, வெங்காரம் ஆறு, நேர்வாளம் ஆறு, பாலேன் திரிகடுகு, கொடுவேலி வேர் இது வெந்த கசாயத்தில் அரைத்து பொடி செய்து பாலேன் குழில் அடைத்துக் கொண்டு ஒரு நெல்லிடை நீத்திருள் நீர் சர்க்கரை இது கூட்டி இடவும். சர்வ சுரமும் சன்னியும் நாசமாமே.

இதுவும் பொன்னரிதாரம் ஆறு கூட்டிக் கொள்ளவும்.

காந்தாதி குளிகை:-

காந்தகம், இரதம், அரிதாரம், நாபி, கடுகுரோகணி இவ்வ சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்து குடுக்கள் உருண்டை செய்து குமரிச் சாற்றி லாகுதல் முலேப் பாலிலாகுதல் சுரம் நாலு நாலு நாழிகையில் விடும்.

இருக்கு கசாயம்:-

சீந்தில், முத்தகாசு, கருவேம்பு, காஞ்சோரி பழுத்த கொத்தமல்லி சுக்கு இது கசாயம் இதுக்கு பத்தியம் பருப்பும், கஞ்சியும் சுப்பை கஞ்சி கொடுக்கவும். ராத்திரி பத்தியம் முருங்க இலே சாறு கூட்டவும். இது ராம பாணமே.

ஜன்னி வாத தோஷம் இருக்கு உருண்டை:-

புள்ளி மான் கொம்பு சீவின பொடியல் வெளி மான் கொம்பு, சீவின பொடி எட்டு நாபி நாலு கார்த்திகை கிழங்கு, நாலு கெந்தகம், இரதம் நாலு இது வெல்லாம் ஒன்றாக கூட்டி கலேங் கொம்பு, புள்ளி மான் கொம்பும் கருக வருத்துக் கரியாக கூட்டிக

கொண்டு கார்த்திகை கிழங்கு, கோமயத்திலே வைத்து சுட்டவும். இப்படி மருந்தெல்லாம் சுத்தி பண்ணி கூட்டிக் கொண்டு கொடுவேலி கசாயத்தில் ஏழு நாள் அரைத்து குன்றி மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தோஷ சுரத்துக்கு ஜன்னி வாத சுரத்துக்கு கசாயத்தில் கொடுக்கவும்.

வியாதி அறிந்து அநுப்பானம் விசேஷத்தில் கொடுக்கவும். பத்தியம் இச்சாப் பத்தியம்.

<u>பயித்திய வாய்வுக்கு:-</u>

வெள்வெங்காயம்ஒரு சேரை மிளகு ஒரு சேரை மிளகை வறுத்துப் பொடி செய்து பிரண்டைச் சாற்றில் இந்த மிளகுப் பொடியும் வெள் வெங்காயம் அரைத்துக்குடிக்கவும். பயித்திய வாய்வு தீரும். கைப்பும், புளிப்பும் தவிர்க்கவும். இது கை கண்டது.

பேய் தமுட்டி வேர் பலம் பத்து, கடுக்காய் வேர், நெல்லிக்காய் வேர், தாளிக் காய் மரத்தின் வேர், சிறுமல்லி வேர், பேராமல்லி வேர், வெட்டி வேர், விலாமிச்ச வேர், சிறுகாஞ்சோரி வேர், நன்னாரி வேர், தூதுவளை வேர், குவளை வேர், மாதளை வேர், தாமரைக் கிழங்கு, தாமரை வளையம், அல்லிக் கிழங்கு, பேய் வெட்டி வேர், நெய்தல் கிழங்கு, நிலயாவரை வேர் இந்த பதினெட்டு வேரும் தொண்ணூறு பலம் கூட்டி முந்தின பேய்தமட்டி வேர் பத்து பலமும் ஆக நூறு புலம் கூட்டி நறுக்கி இடித்து இரு தூணி நீர் வார்த்து அஷ்ட பாகமாக காய்ச்சி இந்த லேகியத்திலே கூட்டுகிற கற்கம்.

தேவதாரம், ஏலம், மஞ்சள், மரமஞ்சள், கிரும்பு, மஞ்சட்டி, தாளிச பத்திரி, நாகப்பூ, வாய்விளங்கம், சதகுப்பை, கோஷ்டம், நல்ல சந்தனம், சாஸ்திர பேதி, சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், இலவுங்கப் பட்டை, நற்சீரகம், நெருஞ்சிக்காய், முத்தக் காசு, மிளகு உரி பாளை வெல்லம் உரி சீனி உரி இளநீர் குறுணி பசுவின் பால் குறுணி இதுவெல்லாம் இந்த பாலிலே அரைத்துக் கரைத்து முந்தின லேகியத்திலே விட்டு பசுவின் நெய்யாகுதல் வெள்ளாட்டு நெய்யாகுதல் தேடிக் கொண்டு முந்தின லேகியத்திலே இட்டுக் காய்ச்சி மெழுகு பதமாக வடித்து தானிய புடத்தில் வைத்து தினம் முக்கழஞ்சு நெய் நக்கவும். இதுக்கு தீரும் வியாதி உம்மாதம், பயித்தியம், விஷ சுரம், நாலு நாளை மாறல் காசம், சுவாசம், உட்டிளம்பு, குஷ்டரோகம், பித்தம், தலை நடுக்கு வச்சா மாறு படம், முசல் கண்வலி, பிரமியம், மூத்திர கச்சம், கல்லெரிப்பு, இரத்த சாய பெரும்பாடு இது வெல்லாம் தீரும். இந்த மருந்தை மலடிக்கு நாற்பது நாள் கொள்ளத் புத்திர சந்தானம் உண்டாகும். மூன்றாங் குளியல் அல்லது நாலாங் குளியில் தப்பாது.

<u>ககனப் பிட்டிகை பண்ணும் வகை:-</u>

வெள்ளுள்ளி தோல் போக்கியது பலம் நூறு, எள்ளு பலம் ஐம்பது திருகின பசுவின் மோர், சுக்கு, கொத்தமல்லிகை, செவ்வியம், ஓமம், கொடுவேலி வேர், கச, திப்பிலி, லவுங்கப் பட்டை, ஏலம், திப்பிலி மூலம், மிளகு, சிறு திப்பிலி, நற்சீரகம், அதிமதுரம் இஞ்சி, கடுகுரோகிணி, பெருங்காயம், இந்துப்பு, வெடிலவணம், காசி லவணம், எவாச்சாரம், இதுவெல்லாம் ஒவ்வொன்றும் பலமாக நிறுத்து கொண்டு இதுக்கு சர்க்கரை பலம் எட்டு நல்ல வெல்லம் பலம் எட்டு, நல்லெண்ணை பலம் எட்டு, காடி அடி வெண்ணெய் பலம் முப்பது இதுவெல்லாம் இடித்து தூளாக்கி முந்தின லேகியத்துடனே கூட்டி பிசைந்து தின மானும் சூரிய புடமாக வைத்து இந்த கடுகு இரண்டு காசிடை உழக்கு காடியிலே கரைத்து வெக சென பதத்திலே காய்ச்சி வடித்து இதிலொன்று காசிடை தேன் கலந்து கொடுக்கவும். குடித் தாப் போலே இரண்டு காசிடை சீனி கொள்ளவும். மருந்து செரித்தாற்போலே தயிரும் சோறும் உண்ணவும். இந்த மருந்து உள்ளே கொள்ள இதுக்கு தீரும் வியாதி என்பது வகை பயித்தியமும் இருபத்தி நாலு வகை சிலேத்துமமும், இருபது வகை பிரமேகமும் மகோதரமும், எட்டு மூல வியாதியும் எட்டும் குஷ்டமும், பதினெட்டு * குஷ்டயோதிரகம் பனிரெண்டு வகை சோகையும் நாலு வகை சூலையும் இந்த வியாதிகள் எல்லாம் தீரும்.

விருத்த முட்டித் தயிலம்:-

எட்டிப் பழம் நஞ்சு இருக்கிறது பலம் நூறு, காடி பதக்கு எலுமிச்சம் பழச் சாறு படி மூன்று, எட்டிக் கொட்டையை இடித்த பொடி நாழி; சிற்று மணக்கெண்ணை படி 4, நல்லெண்ணை படி: 4; வசம்பு பலம் ஐந்து, வெள்ளுள்ளி பலம் பத்து இது கூட்டி பதத்தில் வடித்து மேலும் பிடிக்க வாத மென்னப் பட்டதெல்லாம் தீரும்.

(வேறு) திரிகடுகு, இது மூன்றும் சமன் கொண்டு, சிற்று மணக் கெண்ணெயில் குழைத்து விழுங்க சர்வாங்க வாதமும் தீரும்.

சித்த விபிறமமான சுரமும்:-

ஜன்னிக்கும், ஞானம் கட்டி கொள்ளும் அழுகும். சிரிக்கும். சுரம்விட்டு விட்டு வரும் தலை சுழற்றும்.

இதுக்கு குடிநீர்:-

முலைப்பால், சந்தனம், கோழிக் காரம் கூட்டிக் கொடுக்கவும். பேயன் பழமும் கருப்பு கட்டியும் கோழிக் காரமும் கூட்டி தின்னவும். சர்க்கரையும், அதிமதுரம், திப்பிலி நிலவேம்பு, ஆடாதோடை, சந்தனம், நன்னாரி வேரு, இருவேலி, சுக்கு பற்படாகம், முத்தக் காசு, சீந்தி தண்டு இவை பனிரெண்டும் களஞ்சு போட்டு கொடுக்கவும். பின்னையும் முலைபால் சந்தனம் சீந்தி தண்டு கண்டங்கத்திரி, பேய்புடல், சித்தரத்தை, சுக்கு, விஷ்ணு கிறந்தி, இது கூட்டி காய்ச்சி அசனத்துக்கு மேல் கொடுக்கவும். இரண்டு திப்பிலி போட்டு கொடுக்கவும்.

சன்னி வாதத்துக்கு:-

எருக்கம் வேர், அகத்தி, முருங்கை, சாறணை வேர், வெள்ளை காவளை, வேப்பமுத்து, வெள்ளுள்ளி, வசம்பு, கொடிவேலி, கத்தூரி மஞ்சள், குங்குலிகம், குப்பைமேனி, இவை வேர் பட்டை இவை எல்லாம் கூட்டி நல்லெண்ணை, [வேப்]பெண்ணை, ஆமணக்கெண்ணை இவை மூன்றும் சமனுக கூட்டிப் பதத்தில் வடித்து மேலுக்கும் பூசி உள்ளும் கொண்டு நசியம் பண்ண பதிமூன்று வகை ஜன்னி வாதமும் தீரும்.

தன்ச வுருகிப் பண்ணும் உதரக் களிச்சலுக்கு மருந்து:-

நொச்சியிலை சாறு, பொடுதலைச் சாறு, பிரண்டைச் சாறு, சதிர் கள்ளிச் சாறு, கையாந்த கரை சாறு, குப்பை மேனிச் சாறு, சாறடைச் சாறு, எருக்கிலைச் சாறு, நீர் மேல் நெருப்பு [வெறுப்பு]/ தழுதலைச் சாறு இந்தக் குமணி குரு நாளி சாறும் கொதிக்கிற போது வெள்ளுள்ளியும் இடித்துப் போட்டு காடி. 2, பசுவின் மோர். 2 கொட்டை போக்கின கடுக்காய் நாழி, சுக்கு பலம் இருபது இந்துப்பு பலம் இரண்டு, இதிலே இடித்துப் போட்டு ஏழு நாள் இளங் கொதியிட்டு எட்டா நாள் குருகின பதத்திலே நல்லெண்ணை உரி நெய் உரி வார்த்து பிசறி பதத்திலே குருக வறுத்து இது ஏற்ற பொடிக்கு வேப்பிலை இந்துப்பு நற்சீரகம், ஓமம், திரிகடுகு, கொடுவேலி வேர், அதிவிடயம்; வட்டத் திருப்பி இது வெல்லாம் வகைக்கு நன்னைப் பலம் நிறுத்துப் பெருங்காயம் பலம் ஒன்று இது வெல்லாம் வறுத்து பொடி செய்து முந்தின லேகியத்தில் கூட்டிக் கிண்டி சூரியப் புடம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு தேச காலமும் கொள்ள இதுக்கு தீரும் வியாதி வாயு அக்கிரணி சித்த கிராணி, இரத்த கிரணி வருண்டி கிராணி சர்வ கிரணியும் அதிசாரமும் மூல வாய்வும் பித்த பாண்டுவும் பிள்ளை பெற்றவளுக்கு அதிசாலமும் வயிற்றிலுள்ள பல வியாதியும் எல்லாம் தீரும்.

இதுவும் தேங்காய் பால் உரி, வெள்ளுள்ளி மிளகு உரி, முடக் கொத்தான் இலை இதுவெல்லாம் பால் வார்த்து அரைத்து குருகின பதத்திலே கொதிக்க வைத்து தினம் ஒரு கொட்டைப் பாக்களவு கொள்ளவும். விரை வாங்கி இருந்தாலும் நாயுருவிக் காயிலை கொஞ்சம் கட்டவும். நன்னாரி வேர், பாலை வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளுள்ளி பசுவின் பாலிலே கொள்ளவும். மஞ்சள், மரமஞ்சள், இரண்டு மூன்று காசிடை உள்ளுக்கு பசுவின் கோமியத்தில் கொள்ளவும். இரண்டு உழக்கு கூட்டி கொள்ள தீரும்.

ஏலாதிச் சூரணம் :-

ஏலம், லவுங்கம், லவுங்கப் பட்டை, லவுங்க பத்திரி, சிட்டாங்கிடி நாகப்பூ, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், முத்த காசு, கொத்தமல்லிகை, பேரீச்சம் பழம், முந்திரிகை பழம், தாளிசப் பத்திரி, சாதிக்காய், சாதிப் பத்திரி, வெட்டி வேர், இலாமிச்சை வேர், சந்தனம், கர்ப்பூரம் பால், நெருஞ்சிக்காய், சாறணை வேர், நிலப் பனைகிழங்கு, நிலவேம்பு, அமுக்கிரான் வேர் இது வெல்லாம் சமன் கொண்டு சூரணம் பண்ணி கொண்டு அனுபானம் சூரணம் இரு களஞ்சு நெய்யுங் கூட்டிக் கொள்ள இதுக்கு தீரும் வியாதி படர் தாமரை, செவ்வட்டை கடி, குட்டம், ஆனைச் சொறி, பெருந்தினல் வண்டு கடி, மந்தாக்கினி, பயித்தியம், காமாலை சோகை, ஈளை இரும்பல், பாண்டு குழப்பை, மருந்தீடு, வயிற்றில் பல வியாதியும் தீரும், ஏலாதிச் சூரணம் முற்றும்.

கிராணிக்கு :-

கடுக்காய் கொட்டை போக்கி கருக்கின பலம்.8, சுக்கு கருக்கின பொடி பலம்.7, நற்சீரகம் பலம்.2, கருஞ்சீரகம் பலம்.2, ஜாதிப் பத்திரி பலம்.2, பொன் முசுட்டை வேர் பலம்.2, புங்கம் பட்டை பலம்.2, கொடுவேலி வேர் பலம்.2, மூசி கொகுஞ்சி பலம்.2, சாறணை வேர் பலம்.2, கருவேப்பிலந் தண்டு பலம்.2, பெரு மரப் பட்டை பலம்.2, ஆயப் பட்டை பலம்.2, நல்ல வேளை வேர் பலம்.2, வெள்ள வெங்காயம் பலம்.2, இந்த காட்டு மருந்து மாத்திரம் ஐந்து குறுணி தண்ணீர் விட்டு பதக்கு ஆக காய்ச்சி இதில் தயிர் முக்குறுணி, மோர் முக்குறுணி, பச்சரிசிக் கழுநீர், தூணிப் பதக்கு இது வெல்லாம் தூள் பண்ணி அந்த குழம்பில் போட்டு மணல் போலே உதிருகிற பதத்திலே இறக்கவும். நாள் ஒன்றுக்கு வெரு கடி பிரமாணம் கொள்ளவும். இப்படி பத்து நாள் கொள்ளவும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். இதுக்கு தீரும் வியாதி சகல கிராணியும்மூல ரோகமும் தீரும்.

சத்தி குன்மத்துக்கு :-

பச்சை பயறு பிடி ஒன்று, இள வறுப்பாக வறுத்துக் கொண்டு உடைத்து பருப்பு பண்ணிப் பொங்கி வைத்து வேறே சட்டி காய வைத்து இதில் நெய் ஒரு பிடி வார்த்து காய்ச்சி இதுக்கு கற்கம், பெருங்காயம் காசிடை.உ, இந்துப்பு காசிடை இரண்டு பொடி செய்து போடவும். முற்றின தேங்காய் சுருவிப் போடவும். சீனி சர்க்கரை அரைப்படி போடவும். வெள் வெங்காயம் அரை அரைப் படி உரிச்சு அரைத்துப் போடவும். நன்றுக் கடைந்து இறக்கி வெதும்ப வைத்துக் கொண்டு வெருகடி பிரமாணம் தின்னவும். சத்தி குன்மம் தீரும்.

பிறத்தர்ப்பங்க சுரம் :-

இரதம்.1, அப்பிரகம்.2, செங்கம்.3, லோகம்.5, சங்கம்.4, நாபி.6, நேர்வாளம். இது வெல்லாம் வேப்பம் வேர் கசாயம் வைத்துக் கொண்டு மூன்று ஜாமம் அரைத்து உழுந்துப் பிரமாணம் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஜன்னிக்கு அனுபானம் விசேஷங்களில் கொடுக்கவும்.

குசிகர் கற்பம் :-

சாதிலிங்கத்தில் வாங்கின இரதம்; குழிக்கல்லில் இட்டு நாக பாம்பின் நஞ்சு வாங்கி இந்த இரதத்தில் கூட்ப் போட்டு மத்திச்சால் வெண்ணை போலாம்; பின்பு மயில் பித்து கூட்டி மத்திக்கவும். பின்பு மயில் கால் குழாயில் இட்டு வைத்துக் கொண்டு இந்த எலும்பு கொண்டு மூடி கட்டி தானியப் புடம் ஒரு மாசம் சென்று எடுத்துக் கொண்டு விநாயக பூசை பண்ணி சன்னியும், திரிதோஷங்களும் வெதுப்பும் மெடுத்து கண்ணவு செத்து பல் கட்டி சுய்கால் குழைந்து நாக்கும் விழுந்தால் இவற்றுக்கு கால் பெருவிரலில் சத்திரமிட்டு ஊசி கொண்டு மருந்து எடுத்துப் பெரு விரல் சத்திரமிட்ட விடத்திலிட உடம்பெல்லாம் அனல் எடு எடுக்கும். சரு வாகமும் எரித்து அனல் எடுக்கும். இதுக்கு மரத்து தயிரும் சோறும் இடவும். முந்திரிகை பழம் தின்னவும். மாதளம் பழம் தின்னவும். சர்க்கரை தின்னவும். கரும்பு தின்னவும். தேன் தின்னவும். நெய் தின்னவும். பேரீச்சம் பழம் தின்னவும். இது வெல்லாம் கொடுக்கவும். இது குசிக கற்பம் முற்றும்.

சுத்த ரசம் சுத்தி பண்ணின கெந்தகம் சுத்தி பண்ணின நாபி லோக பற்பம் தாம்பர

பற்பம் இந்த ஐந்தும் சம பாகமாக நிறுத்துக் கொண்டு பெருஞ் செருப்படி சாற்றில் மூன்று நாள் அரைத்து கசக்கி கச்சிகுப்பி ஏழு சீலை மண் கொண்டு உலர்த்தி இதில் மருந்து ரப்பி மாங்கல் கொண்டு குப்பி வாய் மூடி எரி இட்டுப் பிறகு சிறு குண்டு சட்டியில் நால் விரல் அளவில் மணல் இட்டு அதின் மேல் குப்பியை வைத்து சுத்தி வர மட்டம் மணல் வார்த்துக் கூடி கொண்டு குப்பி வாய் தெரியாமல் மூடி குப்பிக்கு மேல் நால் விரல் உயரம் மணல் வார்த்து பின் இரண்டு ஜாமம் சிறுக எரித்து சாங்க சீதளமாக ஆற விட்டு எடுத்துச் சூரணம் பண்ணி செருப்படி சாறு ஆகுதல் இஞ்சி சாறு ஆகுதல் விட்டு அரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு இதற்கு அநுபானம் இஞ்சி சாற்றில் கொடுக்க ஜன்னி வாத சுரம், தோஷம், குன்மம் குணமாம். முலைப் பால் கலைக் கொம்பு உத்திராட்சம், முசுகு முட்டை, நரிக பாம்பு இதக்களில் கொள்ள. ஜன்னி வாத சுரம் தோஷங்கள்முதலான வியாதி எல்லாம் குணமாம்.

(வேறு) ரசம், கெந்தகம், வெங்காரம், பொன்னரிதாரம், மனோசிலை இந்த ஐந்தும் சம பாகமாக கூட்டி செருப்படி சாற்றில் அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தாக உலர்த்தி காசிகுப்பியில் ரப்பி அந்திச் சுவைத்து குண்டு சட்டியில் நால் விரல் மணல் வார்த்து மேல் காசி குப்பியை வைத்து சுற்றி வர மணல் விட்டு மேலே நால் விரல் உயரம் மணல் விட்டு ஆறு ஜாமம் கமலாக்கினியாக எரித்து சாங்க சீதளமாக இறக்கி வைத்துக் கொண்டு செருப்படி சாற்றிலாகுதல் இஞ்சி சாறு ஆகுதல் விட்டு அரைத்து கொண்டு குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு அநுபான விசேஷமாக கொடுக்கவும். ஜன்னி வாத முதலான தோஷங்கள் எல்லாம் குணமாம்.

<u>மகா அக்கினி குமாரன்</u>:-

இரசம், நாபி, அபரகி கெந்தகம், தாளகம், குங்குலிங்கம், எலிப் பாஷாணம், தாம்பிர பற்பம் இந்த எட்டும் சமபாகமாக நிறுத்துக் கொண்டு கையந்தரை சாறு வார்த்து அரைத்து அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி காசி குப்பியில் வார்த்து மாங்கல் கொண்டு மூடி செறி இட்டு குண்டுச் சட்டியில் நால் விரல் உயரம் மணல் வார்த்து அதின் மேல் குப்பியை வைத்து சுற்றி வர மணல் விட்டு மூடி மேலே நால் விரல் உயரம் மணல் விட்டு சிறுக நாலு ஜாமம் எரித்து சுராங்க சீதளமாக ஆற விட்டு இறக்கி வைத்துக் கொண்டு கையாந்து கரை சாறு விட்டு அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு அநுபான விசேஷமாக கொடுக்கவும். சர்வ ஜன்னியும் தோஷங்களும் தீரும்.

(வேறு) நாபி, மனோசிலை, இரசம், கெந்தகம் இது நாலும் சமபாகமாக நிறுத்துக் கொண்டு எருக்கிலம் பால் வார்த்து ஏழு நாள் அரைத்து காசி குப்பியில் போட்டு வாய் மாங்கல் கொண்டு மூடி எரி இட்டு, ஏழு சீலை மண் கொண்டு குண்டு சட்டியில் குப்பியை வைத்துச்சுற்றி வர உப்புக் கொண்டு மூடி வாய் மட்டும் வைத்து கால் அக்கினியாக எரித்து ஒரு நாள் எரித்து சாங்க சீதளமாக இறக்கி வைத்துக் கொண்டு பிறகு கிரந்தி சாறு தேவதாரஞ் சாறு கொடுவேலி வேர், முருங்கை வேர்ச் சாறு இந்த நாலிலும் கூட்டிப் பாவனை பண்ணி ஏழு நாள் பண்ணி பிறகு இந்த நாலு சாற்றிலும் அரைத்து பிறகு நாலு சாற்றிலும் கூட்டி மருந்து மறையச் சாறு வார்த்து மூன்று நாள் சூரிய புடம் வைத்து எடுத்துக் கொண்டு இதுக்கு அநுபானம் கற்றாலைச் சாறும் சர்க்கரையும் பணவிடை மருந்து கூட்டிக் கொடுக்கவும். சீத சுரம், ஜன்னி வாதமும், பித்த சுரம், சர்வ தூரமும் தீரும்.

<u>ரசக் குளிகை</u>:-

ஊமத்தங் காயில் அத்தி சாற்றை விட்டு இரதமும் கூட விட்டு வறளியில் குக்கிட புடமிட ஒரு புடமிட வலியு மாசம் வலிய கரு ஊமத்தை யிலையும், கையாந்த கரையும் களஞ்சு ரசமும் விட்டு அரைத்து உருண்டை பண்ணி ஊமத்தங்காய் குள்ளே வைத்து வறளியில் இப்படி பனிரெண்டு காயில் பனிரெண்டு புடம் இடக் குளிகையாம்.

(வேறு) ரசம் கழஞ்சு நாலு கொண்டு வந்து, புல்லரி வாளிக் கிழங்கும், செந்திராய சாறு

சூலமும் இந்த மருந்து இரண்டையும் அரைத்துக் குகை பிடித்துக் குகை உள்ளே ரசம் விட்டு அந்த குகை அடுக்கு மத்தங்காய்க் குள்ளே வைத்துக் காம் தெரியாமல் சீலை புத்தில் சாணத்தைப் பூசி வேகிற நெல்லில் வைத்துப் புடமிடவும். இப்படி முப்பது காயில் முப்பது புடமிட குளிகை யாம்.

(வேறு) நாலு நாள் மாறலுக்கும் தழுதலையை நொச்சி சாறு வார்த்து அரைத்து உருண்டை பண்ணி பாக்கு வெற்றிலையில் தின்னவும் மாறல் நிற்கும்.

<u>தாபசுரத்துக்கு:-</u>

அதிமதுரம், சாஸ்திர பேதி, கல்நார், கடுகுரோகிணி, கொத்தமல்லி, செண்பகப்பூ, ஏலம் சமம். இளநீர் வார்த்து அரைத்து உருண்டை பண்ணி குளிர்ந்த தண்ணீரில் கொடுக்க சுரம் நிற்கும்.

<u>சீத சுரத்துக்கு:-</u>

துரிசு இரண்டு, எலிப் பாஷாணம் ஒன்று, அரிதாரம் அரை, இரதம் அரை, கஞ்சா இலையும் ஊமத்தை இலையும் சாறு கொண்டு அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி பாலுடன் மிளகு பொடி கூட்டிக் கொடுக்க, வெந்நீர் குடிக்க வாயாலே ஒருக்கால் எடுக்கும். கஞ்சி தெளிவு கொடுக்கவும் சுரம் விடும்.

(வேறு) கந்தம் களஞ்சு, துரிசு களஞ்சு, கெவுரிப் பாஷாணம் களஞ்சு ஊமத்தங்காயிலை சாறு வார்த்து அரைத்து இரண்டு குண்டுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணி பாலில் கொடுக்கவும். பித்த சுரம் நிற்கும். உரி பாலிலே கொடுக்கவும். வாயாலெடுக்கும். உடனே கஞ்சி தெளிவு கொடுக்கவும் மீளவும் வாயாலே எடுக்கும். அந்தியம் போது பத்தியங் கொள்ளவும். இருவாய் கட்டின சுரத்துக்கு மிளகு, திப்பிலி, திரிபலம் நேர்வாளம், கொத்தமல்லி, பற்படாகம் இது வெல்லாம் சமபாகமாக கூட்டி அரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி ஒரு உருண்டையை கற்றாளையும், கடுக்காயும் பிசைந்த நீரில் ஒரு உருண்டை கரைத்துக் கொடுக்கவும். இருவாய் கட்டின சுரம் நிற்கும்.

(வேறு) துளசி ஒரு பிடி, கஞ்சாங் கோரை ஒரு பிடி, சீந்தி கொடி, சுக்கு, கடுக்காய் இவைஇருநாழி நீர் வார்த்து எட்டொன்றுக்கி ராத்திரி போசனத்துக்கு மேல் கொடுக்க சீத சுரம் நிற்கும். பூசனி தண்டு, நிலவேம்பு, சுக்கு, கடுக்காய், நாழி நீர் வார்த்து எட்டொன்றுக்கி ராத்திரி போஜனத்துக்கு பின்பு இரண்டு நாழிகைக்கு மேல் கொடுக்கவும். தாப சுரம் நிற்கும்.

<u>வாத சுரத்துக்கு:-</u>

கடுகுரோகிணி, சாதிலிங்கம் இரண்டு காசிடை, நாபி கழஞ்சு, குளிர்ந்த தண்ணீர் வார்த்து அரைத்து மிளகில் பாதி பிரமாணம் உருண்டை பண்ணி முலைப் பால் சர்க்கரை பெற்ற தென்றில் கொடுக்க வாதசுரம் நிற்கும். இதுக்கு குடிநீர் ஆடாதோடை, சுக்கு எட்டொன்றுக்கி கொடுக்கவும் வாத சுரம் நிற்கும்.

<u>பிரமியத்துக்கு:-</u>

இலுப்பை பூ, உழக்கு கடலை உழக்கு, புது சட்டியில் நாழித் தண்ணீர் வார்த்து பனியில் வைத்து வடி வேறே இருத்து ஆழாக்கு சர்க்கரை இட்டு குடிக்கவும் பிரமியம் நிற்கும்.

<u>ரெத்த பிரமியத்துக்கு:-</u>

அத்தி நீர் நாழியில் பத்து தேற்றான் கொட்டையை அரைத்து சர்க்கரை கூட்டி கொடுக்கவும் இரத்த பிரமியம் நிற்கும். கற்றாளை மடலில் எலுமிச்சங்காய்அளவு புளி போட்டு பிசைந்து உரி நீரில் சர்க்கரை போட்டுக் குடிக்க இரத்த பிரமியம் நிற்கும். கற்றாலை மடல் முதல் நாளே ஊறப் போட்டுக் கொள்ளவும்.

<u>முசல் கண்ணுக்கு:-</u>

ஆவரம் பட்டை முற்றினதாக வெட்டி உலர்த்தி சூரணாக்கி கஞ்சியில் போட்டு

குடிக்கவும். ஒன்பது நாள் குடிக்கவும். ஒன்பது நாள் அரைத்து முழுங்கவும். மேலும் பூசவும். முசலி கண் தீரும். மகா சுகை இறைச்சி அவிச்சு தின்னவும்.

மலம் ஜலம் கட்டுக்கு:-

சுக்கு தழஞ்சு, கீழாநெல்லியும் தண்ணீர் வார்த்து எட்டொன்றாக காய்ச்சி உழக்கு சாறு குடிக்க கழியும்.

வாத என்ணை:-

குப்பை மேனிச் சாறு படி.3, கையாந்த கரை சாறு படி.3, எருக்கிலை சாறு படி.3, எருக்கம் பூ சாறு படி.3, வேலிப் பருத்தி சாறு படி.3, எருக்கம் பால் உழக்கு, கள்ளி பால் உழக்கு என்ணை படி.3, தழுதாலை சாறு படி.3, செவ்வரைச்சாறு படி.3 இது வெல்லாம் கூட்டிக் கொண்டு இதுக்கு கடைச் சரக்கு மருந்து திரிகடுகு, வசம்பு, பெருங்காயம், வெள் வெங்காயம் உரித்து ஒரு படி கடுரோகிணி இந்துப்பு, சிறுதேக்கு இவை ஒவ்வொன்றும் நாலு விராகனிடை நிறுத்துக் கொண்டு கூட்டி அரைத்துச் சூரணம் பண்ணி அந்த என்ணையில் போட்டு கடின பாகத்திலெரித்து இறக்கி இந்த என்ணையை இட வர்தம், வாதகுலை, ஜன்னி அற்புத வாய்வு இது வெல்லாம் குணமாம்.

மஉறா வாய்வுக்கு:-

சிற்று மணக்கிலை, எருக்கிலை, புங்கிலை, பெரும்பூலை இலை, பேராமுட்டி, வாதமடக்கி இலை, அழிஞ்சி யிலை, கொவையிலை, செம்பை இலை, மாவிலிங்க யிலை, வெள் வெங்காயம், புழுகு பசுவின் கோமியம் ஒரு படி, எருமை கோமியம் ஒரு படி, குதிரைக் கோமியம் ஒரு படி, யானைக் கோமியம் ஒரு படி, கழுதை கோமியம் ஒரு படி, கர்டி நாலு படி தண்ணீர் குருனி கோழிக் காரம் கால்படி இது வெல்லாம் கூட்டி ஒரு பானையில் போட்டு காய்ச்சி வேது பிடிக்கவும். வாத ஜன்னி இது வெல்லாம் குணமாம்.

(வேறு) நூறு வருஷத்து வேப்பம் பட்டை ஒரு பலம், சாறணை வேர் இரண்டு பலம், கள்ளி யாம் வேர் பலம் இரண்டு, புங்கம் வேர் பலம் இரண்டு அமுக்கிரா வேர் பலம் நான்கு அவுரி சமூலமும் பலம் நான்கு, சிறு குறிஞ்சா வேர் பலம் நாலு, தூதுவளை வேர் பலம் இரண்டு, குருந்தம் வேர் பலம் இரண்டு, மாவிலிங்கம் வேர் பலம் இரண்டு, கொடுவேலி வேர் பலம் நாலு இந்த பதினொரு மருந்தும் இடித்துப் பன்னிரண்டு வள்ள தண்ணீர் விட்டு வேக வைத்து நாலில் ஒன்றாக காய்ச்சி வடித்துக் கொண்டு இதில் வேப்ப என்ணை படிநாலு, நல்லெண்ணை படி நாலு, விளக் கென்ணை படி நாலு, இதுக்கு உபாசம் வேலிப் பருத்திச் சாறு படி ஆறு, குப்பை மேனிச் சாறு படி ஆறு இது காயிற போது கடைச் சரக்கு சுக்கு, பலம் மூன்று, வெள்ளவெங்காயம் பலம் மூன்று, மஞ்சள் பலம் மூன்று, தழுதாளை சாறு படி ஆறு, எருமைப் பால் சாறு படி ஆறு, குப்பை மேனிச் சாறு படி ஆறு, இது காயிற போது கடைச் சரக்கு சுக்கு பலம் மூன்று, வெள் வெங்காயம் பலம் மூன்று; மிளகு பலம் மூன்று, நறு கருக்காய் நூறு நேர்வாளம் பலம் இரண்டு கருஞ்சீரகம் பலம் மூன்று, பெருங்காயம் பலம் மூன்று, கருங் குங்கிலியம் பலம் மூன்று வெந்தயம் பலம் மூன்று மஞ்சள் பலம் இது வெல்லாம் இடித்துச் சூரணம் பண்ணி தயிலத்தில் போட்டு காய்ச்சி பதத்தில் வடித்து உள்ளுங் கொண்டு மேலும் பூச பதிமூன்று வகை ஜன்னியும், என்பத்தி நான்கு வகை வாய்வும் குணமாம்.

அரக்கென்ணை:-

வெருகங் கிழங்கு பலம் நூறு இடித்து இதில் அறுபத்திநாலு படி காடி வார்த்து காய்ச்சி நாலில் ஒன்றாக வடித்துக் கொண்டு நல்லென்ணை படி நாலு அரக்கு தண்ணீர் படி நாலு, பசுவின் பால் படி நாலு ஆமணக்கிலை சாறு படி நாலு இதுக்கு கடை சரக்கு மருந்து சிறுதேக்கு நாலு திரிகடுகு, அரத்தை, சீரகம், வெருக்கங் கிழங்கு இது வெல்லாம் நாலு விராகனிடை நிறுத்து பொடி செய்து போட்டு கடின பாகத்தில் இறக்கவும். இந்த என்ணையில் தேய்த்து உடம்பிலும் இட்டு உள்ளே ஒரு காசிடை என்ணை பசுவின் பாலுடன் குடிக்கவும். பழ வெதப்பு மாறும்.

பிருங்காமலகத் தயிலம்:-

கைய்யாந்த கரை சாறு படி நாலு, நெல்லிக்காய் சாறு படி நாலு, பசுவின் பால்

படி நாலு, நல்லெண்ணை படி நாலு, கடை சரக்கு கடை நாலு கடுகுரோகனி கடை நாலு, நல்ல சந்தனம் காசிடை நாலு, மருள் கிழங்கு காசிடை நாலு, இலாமிச்சம் வேர் காசிடை நாலு, செவ்வள்ளி ~~காசிடை~~ நாலு, இது வெல்லாம்இடித்து சூரணம் பண்ணி அந்த என்ணெயில் போட்டு பிசின் பாகத்தில் வடித்து தலையில் தேய்க்கவும். உடம்பிலும் பூசவும். சர்வாங்கமும் பூசி முழுக இதுக்கு குணமாகிற வியாதி நேத்திர வாய்வு, தந்த வாய்வு, சிரசு வாய்வு, உபசெவி இரு நாக்கு வளர்ந்து நாக்கில் கொப்பளமானது, வாய் கிரந்தி இது வெல்லாம் குணமாம்.

பஞ்சாக்கினித் தயிலம் :-

முத்தின எருக்கிலை சமூலமும் துவைத்து பிழிந்தெடுநீர் பதினறு படி என்ணை படி ஒன்று பசுவின் பால் படி எட்டு இதுக்கு மேற் பொடி தழுதாளை வேர் கொடுவேலி வேர், சாறணை வேர், அமுக்கிரு வேர், சித்தாரி வேர், எருக்கிலைவேர், ~~நொச்சி~~ வேர், காட்டு முருங்கை வேர் ஆக எட்டு மருந்தும் பொடியாக்கி வெவ்வேறாக ~~அரைத்து~~ வைத்துக் கொண்டு ஏலம், திப்பிலி மூலம், செங்கழுனீர்க் கோஷ்டம், இந்துப்பு, கடுகு, கஸ்தூரி மஞ்சள் இது வெல்லாம் ஒவ்வொன்றும் நாலு விராகனிடை நிறுத்துக் கொண்டு இந்த சூரணம் எருக்கிலை பால் வார்த்து பிசைந்து உருண்டை பண்ணி வேகிறதை உலர்த்திப் போடவும். தயிலம் பதத்துக்கு வந்த பொழுது புதுச் சீலையில் பிழியவும். இந்த தயிலம் உடம்பில் பிடிக்கவும் தலைக்கு வார்க்க ஒன்று, இதுக்கு குணமாகிற வியாதி தரேனித வாய்வு, சந்து வாய்வும், சங்க தோஷத்தில் எடுத்த வாய்வும், தனூர் வாய்வும் அற்புத வாய்வும் இது முதலான வாய்வு எல்லாம் குணம்.

பதிமூன்று ஜன்னிக்கும் என்ணை :-

வேலிப் பருத்தி வேர் பலம் மூன்று, சிற்று மல்லி பலம்.3, தலை விரிச்சான்.3, சீரிப்புடு:3, பேரார் முட்டி.3, வட்ட துத்தி.3, கொடுவேலி.3, காட்டு முருங்கை.3, சாறணை வேர்.3, முள்ளி வேர்.3, கண்டங்கத்திரி.3, தழுதாழை வேர் மூன்று, நாருயண சுள்ளி மூன்று, மிளகு, தக்காளி மூன்று, பெருங்குமிழ் வேர், சிவனார் வேம்பு, மூன்று குதிரை வாலி வேர் மூன்று குமலா தண்டை திராய் வேளை, நாய்வேளை, மயிர் மாணிக்கம் மாவிலிங்கம் வேர், சீதேவி செங்கழுநீர் கோழியவரை வெள்ளருகு, குன்று மணி புங்கம் பட்டை, கிரந்திப்பை குப்பை மேனி, முல்லை வேர், துளசி அம்மையார் கூந்தல், இது வெல்லாம் இடித்து நாலு வள்ள தண்ணீர் வார்த்து குருணியாக காய்ச்சி வடித்துக் கொண்டு இக் கசாயத்தில் பதிமூன்று கோழி முட்டையை உடைத்துஊற்றி விளக்கென்ணை ஒரு படி, வேப்பென்ணை ஒரு படி, நல்லெண்ணை அரைப்படி நெய் அரைப் படி, எலுமிச்சம் பழச் சாறு அரை படி, தேங்காய் பால் அரைபடி, ஆட்டுப் பால் அரைப்படி, ~~தேங்காய் பால் அரைபடி, ஒரு படி~~ நெருஞ்சி சாறு ஒரு படி இது வெல்லாம் கூட்டி இதுக்கு மேற் பொடி மருந்து வசம்பு, மரமஞ்சள், திரிகடுகு, வெள் வெங்காயம், சதகுப்பை, அரத்தை, கஸ்தூரி மஞ்சள், குங்குலிகம், இந்துப்பு, கடுகு, செங்கழுநீர் கோஷ்டம், கடுகுரோகினி, தேவதாரம், அகில், அதிமதுரம், செவ்வியம், திப்பிலி மூலம், பூநாகம், கம்பளிப் பிசின், இலவங்கப் பட்டை இது வெல்லாம் ஒவ்வொன்றும் மூன்று விராகனிடை சூரணம் பண்ணி அந்த என்ணெயில் போட்டு கலந்து கடினி பாகத்தில் இறக்கி உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசவும். இதுக்கு பதிமூன்று வகை ஜன்னியும் வாதமும் குணமாம். இதுக்கு சுக்கான் பிடிக்கிற புகை மருந்து பூனை மயிர், வேப்பம் பட்டை, வெள் வெங்காயத் தோல், முட்டைத் தோடு, திரிகடுகு மஞ்சள், பெருங்காயம், கடுகு, கருங்குங்கிலிகம், எருமை கொம்பு பசுவின் கோமயம், வேப்பஞ் சிறாய் இது வெல்லாம் கூட்டி புகை பிடிக்கவும். எந்த விதமான ஜன்னியும் தீரும். முற்றும்.

வாத என்ணெய் :-

மாவிலிங்கம் விறகு, ஆவரை விறகு, கள்ளி விறகு, ஊமத்தை விறகு, எருக்கம் விறகு இது வெல்லாம் சுட்டு கரியாக்கி சமன் கொண்டு நிறுத்து கள்ளிப் பால் விட்டு அரைத்து நாலு படி என்ணெயில் கலந்து குளவிந்த மஞ்சள் ஏலம் கோஷ்டம், சந்தனம் இவை நாலும் பலம் இடித்து ஆரி பண்ணி என்ணெயில் கலந்து மெழுகு பாகத்தில் இறக்கி உள்ளுக் கொடுத்து சர்வாங்கமும் பூச கால் வலிக்கிறது, வாய்வு இது வெல்லாம் தீரும்.

(தொடரும்)

(வேறு)

பேரரத்தை, சுக்கு, கோஷ்டம், சந்தனம், மஞ்சள், அதிமதுரம், முத்தகாசு திப்பிலி குருவிச்சம், வேர் அறக்கு இந்துப்பு, தேவதாரம், இருள் கிழங்கு, வெட்டிவேர் விலாமிச்சை வேர், கந்டல் நுரை, கடுகுரோகிணி, ஆம்பல் கிழங்கு இவை வகைக்கு நாலு விராகனிடை மோர் தெளிய வைத்து அந்த நீர் இருபத்தி நாலு படி எண்ணை படி நாலு குப்பை பாலை வேர், பெருங் குரும்பை வேர் இவை சமன் கூட்டி இடித்து பதத்தில் வடித்துஏழு நாள் தானிய புடம் போட்டு அதுக்கு மேல் சர்வாங்கமும் பிட்டுப் பிடிக்க சீத சுரம் முதலான சர்வ சுரமும் நாள் சென்ற சுரமும் தீரும். மதக்கிற தைலம் முற்றும்.

<u>எண்பது வாதத்துக்கும் எண்ணை</u>:-

காட்டா மணக்கம் வேர், உகாய் வேர், சிவதை வேர், கொடிவேலி வேர், முருங்கை வேர், சாறணை வேர், அமுக்கிரு வேர், ஆமணக்காம் கரந்தை வேர், கூவிளை வேர், முன்னை வேர், பெருவாகை வேர், பெருங்குமிள் ஆட்டாங் கொடி வேர், சதிர கள்ளி வேர், மாவலிங்கம் வேர், முவ்வாயில் வேர், முதியார் கூந்தல் கொள்ளு, செம்முள்ளி வேர், விளாவேர், செருப்படி வேர், திராய் வேர், முள்காவளை நிலவின்ர வேர் இவை பலம் ஒன்று கொண்டு தூணிப் பதக்கு நீரில் நாலொன்றுக் காய்ச்சி இதில் முன்னாழி எண்ணை விட்டு கடை சரக்கு மரமஞ்சள், அரத்தை, உள்ளி, வசம்பு, திப்பிலி, ஏலம், இலவுங்கம், பச்சை நாவி, கோஷ்டம், இந்துப்பு, பெருங்காயம், கடுகு கச்சோலம், மாஞ்சில் இது ஒவ்வொன்று கழஞ்சு கொண்டு அரைத்து கரைத்து தயிர் நீர் விட்டு பதத்தில் வடித்து நக்கவும். மேலும் புசவும் எண்பது வகை வாதமும் தீரும்.

(<u>வேறு</u>) பேய்க்கு நசியம் பெருங்காயம், விளக்கெண்ணை நல்லெண்ணையும் வார்த்து அரைத்து நசியம் பண்ண எப்படிக் கொத்த பேயும் போம்.

<u>முழங்கால் வாதத்துக்கு எண்ணெய்</u>:-

கள்ளிக்காய் சாறு நாழி, எருமை பாஷாண் கொடி சாறு நாழி, பசுவின் கோமியம் நாழி, வெள்ளாட்டுக் கோமியம் நாழி, நல்லெண்ணை நாழி விட்டு இதுக்கு கற்க கத்திரி, மஞ்சள் கடுக்காய், நாய் வேளை வேர், சுக்கு இவ்வ ஒவ்வொன்றும் முக் கழஞ்சு கொண்டு கூட்டி அரைத்து கரைத்து எண்ணெ பதத்தில் வடித்து முழங்கால் வீக்கத்துக்கு பிடிப் பிக்க நனை. வீக்கம் வாங்கும். இது கை கண்டது.

(வேறு)

நெல்லிக்காய், கெந்தகம் இருபது விராகனிட கொண்டு வந்து சுத்தி பண்ணிக் கொண்டு இதில் ஜாதிலிங்கம் பத்து கொண்டு சுத்தி பண்ணிக் கூட்டிக் கொள்ளவும். சுத்தி பண்ணுகிற வகை ஒரு சிறு பானையில் ஒரு படி கையாந்து கரை சாறு விட்டு வேடு கட்டி வேட்டு மேல் கெந்தகம் வைத்து சட்டி கவிழ்த்து சீலை மண் செய்து எருபட்டையில் புடம் போடவும். குளி கல்லில் குளிக்குள்ளே வைக்கவும். இந்தப் படி கற்றாலைச் சாற்றிலும் பாலிலும் இந்தப் படி மூன்று புடம் போடவும். கெந்தக சுத்தியாம். இந்த கெந்தகத்துக்கு ஒரு பலத்துக்கு ஒரு படி பசுவின் நெய்யில் போட்டு சிறுகத் தீயாக்கினியாக எரித்து சற்றே வெதும்பக் கரைந்து போம். கரைஞ்ச போதே இறக்கி வைத்துக் கொண்டு கை மாறுமல் துளாவி சுத்தி பண்ணின ஜாதிலிங்கம் அரைத்துக் கூட கரைக்கவும். இப்படித் தாம் பார்த்து கொள்ளவும். இதுக்கு முன் விமாதிக்காரர்களுக்கு வயிறு கழிய பண்ணி மூத்தா நாள் நெய் ஒரு கரண்டி கொள்ள இதுக்கு எப்படி கொத்த பிரமியமும் தீரும். பத்தியம் பால், ~~அச்~~ நெய்யில் ---- முற்றும்.

<u>சத்தி எடுக்கிறதுக்கு</u>:-

வில்வப் பழம், சிற்முட்டி வேர், கொத்தமல்லி, சுக்கு, பழ நெல் பொரி, பச்சை பயறு, வெட்டி வேர், இலாமிச்ச வேர், பற்படாகம் இதுவெல்லாம் ஒவ்வொன்றும் இரண்டு காசிடை நிறுத்து இடித்து இரண்டு படி தண்ணீர் வார்த்து அரைப் படியாக காய்ச்சி சர்க்கரையும் தேனும் கூட்டிக் கொடுத்கவும். சத்தி நிற்கும்.

வேறு :-

மூத்த காசு, பற்படாகம், வெட்டி வேர், சந்தனம், இலாமிச்சை வேர், சுக்கு இது வெல்லாம் இடித்தக் கசாயம் வைத்து இரண்டு படி தண்ணீர் வார்த்து நாலில் ஒன்றாக் காய்ச்சி சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும். சத்தி முற்றாசை இவை நிற்கும்.

கெற்பனி சத்திக்கு :- 25.3.63.

ஆச்சா மரத்தின் பூவும் வில்லப் பழத்தின் சோரும் கோரைக் கிழங்கு சரி கூட்டி கசாய கூட்டி வைத்து தண்ணீர் படாத பால் வார்த்துக் காய்ச்சி இந்த பாலும் முந்தின கசாயமும் கூட்டிக் கலந்து கொடுக்கவும் சத்தியும், தலைவலியும், குச்சி ரோகமும் பல சூலையும் நிற்கும். இந்தப்பு அசமதாகமும் சர்க்கரையும் மூன்றும் பொடி செய்து தேனில் குழைத்துத் தின்ன சத்தி நிற்கும்.

(வேறு) முக்குருந்தம் வேர் பட்டை, தெற்றுன வேர் பட்டை, தெற்றுன் பிஞ்சு, சிவனை வேரும், நாவல்ளம் பழம், கண்டங்கத்திரி வேர், சாறணை வேர், சிறுகுருஞ்சா வேர், செப்பு நெருஞ்சி வேர், ஆனை நெருஞ்சி வேர், தவசி முருங்கை வேர், சிறு பூளை வேர், பெரு மட்டைப் பின்ரி வேர், பொன்னங்கண்ணி வேர், சிறுக்கீரை வேர், சீந்தி கொடி வேர், ஈசுபர மூலி வேர், கீழா நெல்லி வேர் ஆக உப இதக்கு கற்கம் கருஞ்சீரகம், நற்சீரகம், திரி கடுகு, கடுகு, அசமதாகம், பெருங்காயம் இது வெல்லாம் நருக்கி போட்டு என்னை சட்டி யாகுதல் நெய் சட்டியாகுதல் இதில் போட்டு பசுவின் நெய் ஒரு படி வார்த்து பொன் நிறமான வாறே இறக்கி வைத்தக் கொண்டு பூசை பண்ணி காலையிலே ஒரு கறண்டி நெய் கொள்ளவும். உப்பு, புளி தவிர்க்கவும், இதுக்கு பத்தியம் பால், மிளகு, பொடி போட்டு அசனம் பண்ண ஈளை இரும்பல், கால் மூச்சு வாங்கி பிருக்கிறது இது வெல்லாம் தீரும். இரும்பல் முற்றும்.

பிள்ளைக்கு குளிர் தோஷமானல் :-

பெண் பிள்ளைக்கு குளி தோஷம் ஊசி வட்டிலானில் பண்ணவும். ஆண் பிள்ளைக்கு ஆண் சட்டி வட்டிலான் கிழங்கும், கத்திரி மஞ்சளும், கம்பிளி பிசினும், உள்ளி வசம்பும், கூட்டி பசுவின் பால் வார்த்து அரைத்து உரி நெய்யில் கொதிப்பித்து பிள்ளைக்கு வார்க்கவும். குளி தோஷம் போம்.

பெருடையாதனம் மகுருவாள் எழுத்தானிப் பூடு புண்ணைக்கில்ப் பிழிக்கி தின்னவும். முலை சுரக்கும்.

எழுத்தானி பூடு நீரில் வேக வைத்துச் சாற்றை துணி யில்லா ஊத்து வறியு ரசம் பலம் மூன்று கெந்தகம் பலம் ஒன்று இரண்டும் சுத்தி பண்ணிக் கொண்டு குழிக்கல்லில் வைத்து கற்றாளைச் சாறு கருங் குட்டித் தக்காளிச் சாறு, துளசி காடி, கண்டங்கத்திரிச் சாறு, புரசு, வேர் சாறு இந்த ஆறு மருந்திச் சாறும் விட்டு அரைக்கிறதுக்கு தினம் அரைப் பதக்கு இரண்டு சார் விட்டு அரைக்கவும். மூன்று நாளாம் தினம் இரண்டு சார் விட்டு அரைக்கவும். அரைத்து இலந்தை கொட்டை பிர்மாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி காசு குப்பியை ஏழு சீலை மண் கொண்டு இதில் அந்த மருந்தை அந்த குப்பியில் நிறைய வார்த்து குப்பி வாய் கரு மாங்கல் அமத்தி அந்த வாய்க்கு கடுக்காயும் சோறும் அரைத்து இந்த குப்பி வாய் தெரியாமல் அந்திச்சு சிறு மணல் கொண்டு பாண்டத்தில் நல்ல வெள்ளை மணல் கொண்டு வந்து நாலு பங்காக பிரித்து ஒரு பங்கு பாண்டத்தில் பரப்பி இந்த குப்பியை வைத்து மேல் மூன்று பாக மணலும் போட்டு பானை பரப்பி மூன்று விறகு நாலு விறகு போட்டு எரிக்க பனிரண்டு ஜாமம் எரித்து பின்னையும் ஆற அந்த அடுப்பில் ஆற விட்டு பூசை பண்ணி இறக்கி வைத்தக் கொண்டு சிமிழில் வைத்துக் கொண்டு அநுப்பான விசேஷமாக கொடுக்க சர்வ வியாதியும் சர்வ ஜன்னியும் குணமாகும். வியாதி அறிந்து அநுபானம் கூட்டி கொடுக்கவும்.

சத்தி எடுக்கி விக்கலுக்கு :-

நாவல் கொழுந்து மாங் கொழுந்தும் மாங்கொட்டையும் மூன்றும் கூட்டி பொடி செய்து சர்க்கரை பொடியும் சரியாக கூட்டி தின்ன நிற்கும்.

திப்பிலி கடுக்காய் விளாம்பழம், கொடி மாதளம் பழம் புளிஞ்சு இதில் லோகம் பண்ணி கொடுக்கவும். மஉறா சத்தி நிற்கும். நல்லது. விக்கலுக்கு மயிலிறகு சுட்டு பொடி செய்து சீலையில் வைத்து திருந்த தொஞ்சு நெய்யில் தோய்த்து விளக்கில் சுட்டு புகை குடிக்க விக்கல் நிற்கும்.

(வேறு) சீதேவி செங்கழுநீர் வேரும், கல்லுப்பும் கூட்டி அபிரேக்கை பலகை பலகையாக விரித்து உரலில் போட்டு இடித்த முன் மருந்தும் கூட்டி பிசைந்து தேய்த்து பிழிந்து போட்டு பார்க்க நவநீதமானது வெண்ணெ போலே இருக்கும். அதை மருந்தில் கூட்டிக் கொள்ளவும்

ஜன்னி குணம் நாக்கும் பல்லும் கறுக்கும். வாய் கசக்கும். குருந்து கொதிக்கும். நாவு வரும். வாக்கு அமர்ந்திருக்கும். மூச்சையு மதியாக்கும். மார்பினிற் பாரிக்கும் நெஞ்சு புண் போலே நோகும். பார்வை சிவக்கும். மெய் குளிரும். நொந்துடல் தளரும். செயல் கெட நாக்கும் வீக்கம் தண்ணீர் தாகம் உழலை வெறிந்தன பேச்சு எடுத்த ஜன்னிக்கே.

இதுக்கு கசாயம்:-

வர்கை வேர், முள்ளை குமுழு, பேராமல்லி, சித்தாமல்லி, பாதிரை, வில்வம், நெருஞ்சி அவரை வேர், வழுதலை, கண்டங்கத்திரி இது தேச மூலமென்பது தேசமூலம், பற்படாகம், முத்தக் காசு, சிறுதேக்கு, கடுக்காய், தாமரை வளையம், இதைப்போதும் கசாயம் மிடில் விஷ சுரம், ஜன்னி இரும்பல் இளைப்பு நெஞ்சு தலை நோக்காடு அசவில் தொந்தலி சீத சுரம் பழ வெதுப்பு அக்கினி மாந்தம் இவை தீரும்.

மங்கண ரோக விசையோ:-

ஆடாதோடை பூசனித் தண்டு மேற் பொடி இந்துப்பு கூட்டொரு கசாயமே சுக்கு கூட்டவும். சுக்குன் வாயிந்தர் சிறுதேக்கு இது முலைப் பாலில் உண்ண போம்.

குத்த ஜன்னி கசாயம்:-

கலைன் கொம்புரைத்து முலைப் பாலில் கொள்ள பெருத்த ஜன்னி போகும்.

பித்த ஜன்னிக்கு லேபனம்:-

அதிமதுரம், சந்தனம், மாம்பூ, புனுகம், உதவு கோரோசனை, கடுகுரோகணி இவை ஐந்தும் கூட்டி இரு கழஞ்சு கொண்டு முலைப் பாலில் கொள்ள நீட்டுங் கை கால் அசவு, நெடுமூச்சை, நாட்டு பாலாயம் ஜன்னி பாதம் இவை தீரும்.

தந்திரிக ஜன்னிக்கு:-

தந்திரிக ஜன்னிக்கு உடல் வேதினை நடுக்கும். தாக முரும்சிகஞ்சிரு-சாகும். அறிவு பல மயக்கம் உயர்ந்திருக்கும். கை கால் நடை குறைந்திடும். உண்டி கெடும். முற்ற நாள் இருபத்தஞ்சளவும் தோஷமே இதுக்கு கசாயம்.

சீந்தி யோடிலா பச்சை பற்படாகம் சுக்கு, சிற்று மல்லி, பெருமல்லி, கடுகுரோகினி, திப்பிலி வசம்பு, மாவுத்த இவை, பன்னிரு கழஞ்சு நீருந் நாழி உழக்காக காய்ச்சிடவும். தந்திரிக ரேகம் இல்லை இல்லையே.

கண் சிவக்கும். சுரம் அதிகப் பல நாச எரித்தல் விக்கல் கிறி வெட்கை யிருக்கும். ரத்தெளிந்து கூப்பிடும் அறிவு கெடும். மயக்கம் கொடிது உழவுலத்து நாளில் நோவு அசாத்தியம். இதுக்கு கசாயம்.

அரத்தை, கொத்தமல்லி, சுக்கு, சிவளை பற்படாகம், ஆள பூசனித் தண்டுகம் பந்திராய கோரை கிழங்கு, உரத்த நீரில் இரு நாழி வழிக்கயா உண்டிடவுழி இரத்த தீட்டு கண்ட தில்லையே.

கண்டக ஜன்னிக் குணம் செரு மேல் சுரம் இளம்பு வயறு நோம். கழுத்து நரம் பிழுக்கும். மாகுள்ளே யாமகபம் தொண்டை அடைக்கும். நோம் மொழி தவறும் நாவுலரும். முகஞ் சுழிக்கும். மத்தனுக் கென்னும் பெரு மூச்சிடும். தோரை கடுக்கும்.

உன்டெனவே சிறு தேக்கு, நிலவேம்பு, சித்ரத்தை, கடுகுரோகிணி, தேவதாரம், வழுதலை வேரு; விண்டுரைப்பிதா யிலிறைக் கசாயமிடு. மிடுமே விபரீதம் பத்தொன்பது. நாளளவும். தோஷம்.

சீதாங்க_சன்னிக்குக்_குணம்:-

உடம்பு கை. கால் குளிரும். திராப்பிலயிகும். விக்கல், உவா்ந்தி பலரைதமாம். தங்க மலம் விடாது.வழுலே தண்ணீர் தாகம் தாளற சிருது பதிஞ்சு நாள் அளவுந் தேர்ஷமே.

. பொங்ு, சுக்குத், திரபாலே, லவுங்கம், பூசனி, சுரை தண்டு லாமிச்சை தூசுவளை எதாங்க மெஞ்ஞ .தெசநதனமும் கூடக் கசாய மிட்டு கொள்ளுமே. ~~அந்தக~~

அந்தக_ஜன்னிக்கு_குணம்:-

அசதி நித்திரை, சற்றிலறிவு வரும். நிலம் புறண்டும் வுயிர விடாத உடல் வெதும்பும். சிந்தை கெடும் சலம் இறங்கும். தலே சொரியும். நாக்கு கருக்கும். செயலனையும். கை கால் குளிரும். இதா் கின்ற கேழ் தந்தரி மாங், கடுக்காய், சிறுதேக்கு இருவேலித் திண்டி லாமிச்சை, பற்படாகம், சுக்கு மூந்தி யிரு க்சாயத்தில் கோரோசனி கரைத்து முலைப் பாலுடன் குடிக்க அந்தறு மயிங்கியே.

அரி_மாரி ஜன்னிக் குணம்:-

நீர் கடுக்கும்: பலன் குன்றும்; அரைக்கை கால் தளர்ந்த நெளிக்கும். தலே பிரண்டும். மரண வலி எழுந்திருக்கும். மார்பிலே பாரம் வாயி உலற்றிடும். இதற்கினிய வகை கேள்.

தெறம நெல்லும் பெருவாகை முன்னே குமிள் ப்ாதிரி பேரமல்லி சிற்றமல்லி காவளை நன்னாரி நீர் மித்த கண்டங் கத்திரி நெருஞ்சியில் நீயி கசாயம் இஞ்சியுடன் கூட்டே:

கண்டக ஜன்னிக் குணம் உடல் புன் போலக் கடுப் பெழுந்து கடுஞ் சுரம். வெள்ளோக்காளம் நிாக்குக் குளரும். மருண்டிருக்கும். மிண்டி அழும் . நித்திரை வராது.
இதுக்கு மருந்து: உள்ளிக் கடுகுரோகிணி, நொச்சியிலே, சுக்கு, தேவதாரம் கசாயம் இட்டு வடித்து நீர் எட்டிலொன்று மிஞ்சி சாத்துடன் கொள்ளே.

அதிக_சன்னிக்கு_குணம்:-

உலர்த்தும். வெதைப்பும். வயறு கடும் அழகழியும். பலன் கெடும். தண்ணீர் தாகம் மூச்சை. மதி மயக்கும். தெளிவு வரும். பசிக்கும்.

இதுக்குமருந்து:-

வாகாய், நொச்சியிலே, பூசனித் தண்டு, பற்படாகம் இருவெள்வே நிலவேம்பு, பேராமுட்டி, சுக்கு, ஏலம், திப்பிலி இவை யோர் கசாயமடு. இதிலே வதி வஞ்சம வராது. மிக்க சுரம் மெய்ய தரும். விடா விடும். மதிக ஜன்னி விட்டோடிப் போகுமே.

அசுவுத_ஜன்னிக்கு_குணம்:-

தான வோர் அது ஜீரமுண்டு ஆகார மிறங்கும். தண்ணீர் தாகமுண்டு, விசிவாக உடம்பிழைக்கும். நித்திரையு முண்டு.

இதுக்கு மருந்து:- மஞ்சிட்டி, கடுகுரோகனி, மாஞ்சில் வ்சுவாசி, செண்பகம், கொத்தமல்லிகை கொட்டடிக் கிழங்கு, சுக்கு, பற்படாகம், சீதேவி, செங்கழுநீர் பூசினியாதல் கசாயமிடு இஞ்சி நீர் போருவிட்டு திப்பிலி மேற் பொடியாகக் கூட்டே.

அலறு_ஜன்னிக்கு_குணம்:-

அழும். விழும். சுப்பிடும். மருகிருந்தோரை அடிக்கும். சீலேயுமிரும். உடல் உலர்த்தும். செல்லறியும். யிரு கை முலத்தில் வைக்கும்.

~~இதுக்கு மருந்து~~:-

இதுக்கு மருந்து :-

உற்றதிவை தாமரை வளையம், சந்தில் சியலத்திலே யேலமதி மதரம், சிற தேக்கு திப்பிலி, பேய்ப்புடல், இலுப்பை பூ, சுக்கு இவை யோர் கசாயமிடு. மீளத்த முலைப் பாலு முக்குடன் கூட்டி சாரித்து வெறு மென்று கொள்ள. அலறு ஜன்னி இல்லை இல்லையே.----

இருவேலி பற்படாகம், சந்தனம், கொத்தமல்லி, முலை, வேர், சுக்கு சேர் கசாயம் மிலாச்சி விழும். முலைப் பாலில் முந்திரிகை பழம், பேரிச்சம் பழம், பற்படாகம், நல்ல விலாமிச்சை இருவேலி, சுக்கு, நல்ல கசாயம் இது உண்மை பலவுக்குமே. ஆக ஜன்னி பதிமூன்றுக்கும் போமென சொன்னபடி.

ஜன்னி வாதத்துக்கு பொட்டணம் :-

அழிஞ்சி விரை, சண்பம் விரை, கார்கோ கொள்ளு, கடுகு, பருத்திக் கொட்டை முருங்கை விரை புன்னை விரை, சிற்று மணக்கம் விரை, உளுந்து, தேங்காய், புங்கன் கொட்டை வேப்பங் கொட்டை, சதகுப்பை, வெள்ளுள்ளி, கழச்சிப் பருப்பு, வாலுளுவை, விழலரிசி, ஓமம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், கடுகுரோகிணி, வசம்பு, திரிகடுகு இது வெல்லாம் சமன் கொண்டு துவைத்து எண்ணெ சட்டியில் போட்டு வேப்பெண்ணெ, நல்லெண்ணெ, விளக்கெண்ணெ இந்த மூன்று எண்ணெயும் விட்டு வறுத்துக் கொண்டு பொட்டணம் கட்டி நடுவே கோல் வைத்து கட்டி கை சுடாமல் பிடித்துக் கொண்டு சட்டியிலே எண்ணெ யிருக்க காய்ச்சிக் காய்ச்சி ஒத்தவும். ஜன்னி வாதம் தீரும்.

ஜன்னிக்கு நிம்பாதித் தயிலம் :-

முத்தின வேப்பம் பட்டை பலம் நாறு, துளசிச் சாறு, ஆடாதோடை, பிறமிச் சாரு தூதுவளைச் சாரு, வேலிப் பருத்திச் சாரு, ஈசுர மூலிச் சாரு, நொச்சி சாறு இவை வகைக்கு நாலு படி சாறு, நல்லெண்ணெ படி நாலு, வேப்பெண்ணெ படி நாலு, விளக்கெண்ணெ படி நாலு இதுக்கு கற்கம். கிலுகிலுப்பை, நன்னாரி, சிவனார் வேம்பு, கிரிமிக்கு கிழங்கு, முசுரு முட்டை இலுப்பைப் பூவு, பச்சைப் பாம்புக் கண்டம், மஞ்சள், கீழா நெல்லி, செவ்வியம் சிறு தேக்கு, கொடி வேலி, அமுக்குளா வேர், பொன் முசுட்டை, திரிகடுகு, திப்பிலி மூலம், கருஞ்சீரகம், கற்கடக சிங்கி, தேவதாரம், கடுகு, கடுகுரோகிணி, மரமஞ்சள், வெள்ளுள்ளி வேறு வகை வகைக்கு பலம் ஒன்று கடை மருந்து வகைக்கு பலம் ஒன்று இரண்டு வகையும் இடித்து சூரணம் பண்ணி இந்த எண்ணெயில் போட்டு கடின பாகமாக இறக்கி வடித்துக் கொண்டு இந்த எண்ணெ தானிய புடம் முப்பது நாள் வைத்து உள்ளுங் கொடுத்து மேலும் பூச நசியம் பண்ணி சர்வாங்கமும் இட்டு அப்பிங்கனம் பண்ணிக் கொள்ளத் தீரும் வியாதி ஜன்னி விடபாகம் தீரும். இவ்வெண்ணெ சன்னிகுலாந்த எண்ணெ சுரக்கு மிது லோகி தாண்ட தயிலமே

மரண வாத ஜன்னிக்கு :-

புங்கெண்ணெ, வேப்பெண்ணெ, நல்லெண்ணெ, இலுப்ப எண்ணெ, மாவெண்ணெ இவை சமன் குண்டு மணி வேர், கொள் சிந்தி வேர், குட்டி வேர், வேலிப் பருத்தி வேர், உப்பிலி வேர், சாரணை வேர், நத்தச் சூரி வேர், ஊமத்தை வேர், ஆரை முறி வேர், நல்ல வேளை வேர், முடக் கொற்றான் ஆதண்டை வேர், அவுரிதிராய் யிரண்டு, நெற்ற வெப்பம் பட்டை, எருக்கம் வேர், தவசி முருங்கை குரட்டை வேர், சித்தாமணக்கு, இலுப்பை கொட்டை, புங்கம் வேர் செந்நாயுருவி, சித்தாமல்லி, பேராமல்லி, வாகை வேர், கிலு கிலுப்பை, நன்னாரி கடை மருந்து செவ்வியம், கற்கடக சிங்கி, சிறுதேக்கு, திரிகடுகு, வெள்ளுள்ளி, கடுகு, மரமஞ்சள், தேவதாரம், கடுக்கதய், கருஞ்சீரகம், கடுகுரோகணி, மஞ்சள், சந்தனம், இலுப்பை பூவுப் பச்சை பாம்பு கண்டம் புகைம் கிடா குரும்பி, முசுரு முட்டை, குதிரை குளம்பு இது வெல்லாம் இடித்து எண்ணெயில் போட்டு வெந்து வடித்துக் கொண்டு இந்த எண்ணெ கல்லை மறித்துப் பூச காசினடதான் நக்கவும்.

மலங்கு சுரம், ஜன்னி பதினெட்டு, தூர் வாதம், சர்வாங்கம் பின்னும் பிற சன்னி, மர சன்னி, உன்னிய வாத கட்ரப்பான், விடபாகம் மற்றெவையும் தீதறவே. தீரும் என்று செப்பு வாமே.

நசியம் எந்த ஜன்னிக்குமாம்:-

குங்குமப்பூவை தண்ணீரில் கசக்கி மூக்கில் விடு. சினேக பொட்டணம்: முத்தின தேங்காய் உள்ளி சிறங்கை வசம்பு ஒரு பலம் பொடி செய்து வேப்பெண்ணெ விட்டு வறுத்து ஒற்றிட பிரலாப ஜன்னியும் வாதமும் தீரும்.

அலத்து ஜன்னிக்கு என்ணெ அஞ்சனம்:-

குன்றி, திராய், முசுருக், கூடு, சங்கு உப்புலி இலை, வேர், பச்சை பாம்புக் கண்டம், உள்ளி, வசம்பு, வெளிச்சிப் பிசின், ஒவ்வொரு காசிடை, நல்லெண்ணெ நாழியில் காய வைத்து உன்டெனவே பூசி உள்ளுங் குடிக்கிலோடும்.

அலத்து ஜன்னி என்பது ஆயில் பட்டை பலம் நூறு இந்த நூறு பலமும் நசுக்கி இடித்து இரண்டு நூறு படி 200 படி தண்ணீர் வார்த்து ஒன்றாக காய்ச்சி இறுத்துக் கொண்டு இதில் என்ணெ ஆறு வந்த அரைக்கால் படி என்ணெயும் வார்த்து பசுவின் பால் படி ஆறே கால்!

இதுக்கு கற்கம்:- அரத்தை, வாய்விளங்கம், பூமிச் சர்க்கரை கிழங்கு, தேவதாரம், கொடுவேலி வேர், சிறுதேக்கு, சிறந்தி தக்ரம், தக்கோலம், தண்ணீர் விட்டான்கிழங்கு, ஆமணக்கம் வேர், சாறணை வேர், நொச்சி வேர், அமுக்கிரா வேர், திப்பிலி கடுக்காய், கொழிஞ்சி வேர், சித்தரத்தை கல்லுப்பு, பேய்க்கும்மட்டி வேர், கழச்சிப் பருப்பு, பெருங்காயம், கடுகு, கத்திரி மஞ்சள், எருக்கிலை வேர், பொழுது திருப்பி வேர், முள்ளி வேர் கண்டங்கத்திரி வேர், நரிப் பயிரு வேர், சித்தா முட்டி வேர், பேராமுட்டி வேர் இது வெல்லாம் ஒவ்வொன்றும் ஆறே கால் படி சாறு கூட்டி பதத்தில் வடித்து கடின பாகத்தில் வடித்து இந்தத் தயிலத்தை உடம்பில் அப்பி ஸ்நானம் பண்ண ஒரு கறண்டி உள்ளுக்கு கொடுத்து மூக்கில் நசியம் பண்ணவும். காதில் வார்க்க சர்வாங்கமும் பிடிப்பிக்க இதுக்கு தலைக்கு பலமாய் கட்டவும். இதுக்கு தீரும் வியாதி பாரிச வாய்வு தநுர வாதம் ஒரு காலும் கையும் வராமலிருக்கிறதும் சிரசு வாய்வும் ஏகாங்கி வாய்வும் இது வெல்லாம் குணமாம். மஉறா பூதிக்கா தயிலம் சொன்னபடி முற்றும்.

ஜன்னி வாதத்துக்கு என்ணெ:-

எட்டி மரத்தடியில் ஒரு ஆளுக்கு மாரளவு குழி வெட்டிப் போட்டு வடக்கே போகிற வேரை தோண்டி குறுக்கே அறுத்து அந்த மரம் அடங்க நீக்க பானையை வைத்து மூடி போட்டு தறித் தகட்டை அத்தனை உயரத்துக்கு விறகு நிரம்ப அடுக்கி சுட கசாயம் பானையில் இறங்கும். அதில் வெள் வெங்காயம் கடுகு, வசம்பு, பெருங்காயம், தழுதாழை சாறு இது வெல்லாம் கூட்டி எரித்து வேப் பெண்ணெ கூட்டி எரித்து இட ஜன்னி வாத முதலான வாதமெல்லாம் தீரும்.

சகா தேவி தயிலம்:-

காடி பதினறு படி, எருக்கிலை சாறு படி நாலு, புளி இலைச் சாறு படி நாலு, துளசிச் சாறு படி நாலு, சீதேவி செங்கழுநீர் சாறு படி நாலு, நல்லெண்ணெ படி நாலு, இது வெல்லாம் கூட்டி இதுக்கு கற்கம், திரிகடுகு, சித்திர மூலம், மஞ்சள், கடுரோகிணி, அமுக்கிரா வேர், வசம்பு, கோஷ்டம், கற்கடக சிங்கி, வேப்பம் விரை, மருள் கிழங்கு, சதகுப்பை இது வெல்லாம் ஒவ்வொன்றும் நாலு விராகனிடை நிறுத்துச் சூரணம் பண்ணி என்ணெயில் போட்டு இந்த என்ணெ பதத்தில் வடிக்கவும். வடித்து உடம்பில் பிடிக்கவும். அநேக வாய்வு மாதிரியாக சாதித்து சீக்கம், பூத சுரம், உடம்பில் தினவு இது முதலான வியாதி எல்லாம் தீரும். இது சீதேவி தயிலம்.

அமிர்தாமலகத் தயிலம்:-

சீந்திக் கொடிச் சாறு நெல்லிக்காய் சாறு, முசுமுசுக்கை சாறு, குண்டுக்கல், காக்குரசம், தாளை விழுதுச் சாறு, கற்றாளை வேருச் சாறு, நல்லெண்ணெ பசுவின் பால் இது வெல்லாம் சமன் கொண்டு இதுக்கு கற்கம் அதிமதுரம், லவுங்கம் பத்திரி லவுங்கப் பட்டை, ஏலம், கோஷ்டம், ஜாதிக்காய், முந்திரிகைப் பழம், தண்ணீர் விட்டான் கிழங்கு,

இரத்த சந்தனம், மல்லிகை அரும்பு, விலாமிச்சை வேரும் வெட்டி வேரும், தானிக்காய், இது வெல்லாம் சமபாகமாக நிறுத்துக் கொண்டு சூரணம் பண்ணி என்ணெயில் போட்டு சிறுக எரித்து பதத்தில் வடித்து கொண்டு பூசா விதானத்திலிறக்கி தானியப்புடம் வைத்து தலைக்கு அப்பியங்கனம் பண்ணிக் கண்ணில் விட்டு தலைக்கு சுத்திக் கட்டவும். இதுக்குத் தீரும் வியாதி தலையில் பிறமை, நடுக்கு தலை குத்தி நோகிறது கண்ணில் கலக்குத்தி நோகிறது கண் சிறுத்தியிருக்கிறது, பெருத் தலை நோவு இது வெல்லாம் தீரும்.

<u>அசுவு கந்தி பாலாக்ஷாத்தி தயிலம்</u>:-

அமுக்கிரா வேர் இருபத்தைந்து பலம், மாவிலிங்கம் பட்டை இருபத்தைந்து பலம் இது இரண்டும் நறுக்கி இடித்து ஐம்பது படி தண்ணீர் வார்த்து நாலிலொன்றாக காய்ச்சி இதில் தயிர் தண்ணீர் நாலு வள்ளம் அரக்கு ஒரு நிறுத்துப் பொடி செய்து இதில் இரண்டு வள்ளத் தண்ணீர் வார்த்து காய்ச்சி இறுத்துக் கொள்ளவும். இந்த கசாயத்தில் வார்க்கவும். நல்லெண்ணெய் எட்டுப்படி இதுக்கு கற்கம் அரத்தை, கோஷ்டம், வாய் விளங்கம், நற்சந்தனம் நன்னாரி வேர், வெட்டி வேர், விலாமிச்சை வேர், முத்தக் காசு, மஞ்சிட்டி, மருள் கிழங்கு, அதிமதுரம், முள்ளங்கி விரை, மரமஞ்சள், நல் மஞ்சள், கடுகுரோகிணி, தேவதாரம், சதகுப்பை இது வெல்லாம் ஒவ்வொன்றும் நாலு விராகனிடை நிறுத்து கொண்டு சூரணம் பண்ணி தயிலத்தில் போட்டு மெள்ள எரித்துப் பதத்தில் வடித்து விசையகப் பூசை பண்ணி தயிலம் உள்ளே கொள்ள அப்பியங்களம் பண்ணிக் கொள்ள இதுக்கு தீரும் வியாதி எட்டு க்ஷயம், காச சுவாசம், வாதம், வெதப்பு இது வெல்லாம் குணமாம்.

<u>மஹா சக்தினித் தயிலம்</u>:-

வெருக்கின் கிழங்கு, சிற்று முட்டி வேர், பேராமுட்டி வேர் இது வெல்லாம் வகைக்கு பத்து பலம் நிறுத்துக் கொண்டு நறுக்கி இடித்து அறுபத்து நாலு படி தண்ணீர் வார்த்து நாலிலொன்றாக காய்ச்சி இந்த கசாயத்தில் என்ணெய் எட்டு படி வார்த்து என்ணெக்கு சரி பெருங் கரந்தைச் சாறு வார்த்து மோரில் தெளிவு முப்பத்திரண்டு படி வார்த்து அரக்குச் சாறு பதினாறு படி இதுக்கு கற்கம், வெப்பாலை அரிசி, அதிவிடையம், கோரைக் கிழங்கு; சித்தரத்தை, பேய்புடல், கோஷ்டம், கரு வெப்பர்க்கு, வாய் விளங்கம், கஸ்தூரி மஞ்சள், திரிகடுகு ஓமம், கொடிவேலி, வேர், லவங்கம், கஞ்சாங் கோரை வேர் கடுகு ரோகிணி, பொன்முசுட்டை வேர், புலான் கிழங்கு, அகில் மஞ்சட்டி, சதகுப்பி, சிறுதேக்கு, திப்பிலி மூலம், செவியம், வெள் வெங்காயம், ஒட்டரை இது வெல்லாம் ஒவ்வொன்று எட்டு விராகனிடை நிறுத்து சூரணம் பண்ணித் தயிலத்தில் போட்டு தயிலம் பதத்தில் வடித்து புதரட்டு கொண்டு வெடித்து சாவி தானம் பண்ணி தானிய புடம் வைத்துக் கொண்டு இந்தத் தயிலம் சிரசில் அப்பியங்களும் உள்ளே கொள்ள நசியம் பண்ண சர்வாங்கமும் பிடிப்பிக்கவும் இந்தப் படி செய்கிறதுக்கு தீரும் வியாதி சீத சுரம், பூரான சுரம், எக்கா பிக்கம், இத்; வாயு கத்திரி யாக்கம் சாத்து சிக்கம் விஷமச்சுரம், ஜன்னி வாதம், இருமலும், சுரமும் உடம் பும் பலக்கும் தாது விர்த்திக்கும். ஆரோக்கிய முண்டாம். ஆயுசும் விரிவர்த்திக்கும். ஆத்திரேய முன் சொற்படி உலகத்துக்கெல்லா லோக உபகாரம் காரணம் இது வெல்லாம் குணமாம்.

<u>சிலேற்ப்பன சுரத்துக்கு என்ணை</u>:-

வெருகு தன்டு இலையும், சிறுக நறுக்கினது ஐம்பது பலம் இவ்வ தவைத்து குருணி காடியில் இட்டு பிசைந்து நாலில் ஒன்றாக வேக வைத்து வடித்து இதிலே வெருக்கன் கிழங்கு இலையும் வேரும் முத்தக் காசு, குதிரை வாலி வேர் நன்னாரி வேர், அமுக்கிரா வேர், இவை ஒவ்வொன்றும் ஒரு பலம் கொண்டு கடை மருந்து பெருங் குரும்பை மஞ்சட்டி மரமஞ்சள் அதிமதுரம், கோஷ்டம்; ஏலம், திப்பிலி, தேவதாரம், கடுகு ரோகிணி, கற்கடக சிங்கி, இந்துப்பு, திரிபலை, கொத்தமல்லிகை, சீரம்பு இவை யெல்லாம் ஒவ்வொன்றும் மூன்று பலம் ---- கொண்டு முந்தின கசாயத்தில் வார்த்தரைத்து முன் சொன்ன வேரும் அரைத்து கரைத்து முன் நாளி நல்லெண்ணெ வார்த்துக் குழப்பி மூன்று நாள் வெந்து வடித்து உள்ளும் கொண்டு மேலும் பூச சேத்தும சுரம் நிற்கும். அரக்குச் சாறு படி மூன்றும் கூட்டிக் கொள்ளவும்.

வேர்வைக்கு கற்கம்:-

பிட்டுகட்டி சங்கிலை, பெரு மரத்தழை, வெரு மரப் பட்டை ஆதண்டை யிலை இடித்துப் ~~பிட்டுகட்டி~~ இதில் சுக்கு, மிளகு, திப்புலி, வெள்ளுள்ளி இது முடிஞ்சு நடுவே வைத்து வெந்து பிழிஞ்சு அந்த கற்கம் அரைத்துக் கலந்து கொடுக்கவும். நசியம் முசுரு முட்டை, எருக்கம் பழுப்பு, குப்பை மேனி நருக்கி மூக்கில் புழியவும்.

வயிற்று விப்புருதிக்கு:-

கோயில் பழஞ் சாந்து கொண்டு வந்திடிச்சு தெள்ளி இதில் எலுமிச்சம் பழச் சாறு அரைப் படியில் அரைத்து குடிக்க உடையும். அரையாப்புக்கு கீழ் கொண்டால் இப்படி குடிக்கவும். சிற்றுலே விழும்.

குன்மத்துக்கு:-

முற்றின தேங்காயை கண் திறந்து இரண்டு காசத்தனை கள்ளிப் பால் புகட்டி காரந் துளி, பெருங்காயமும் கல்லுப்பு இரண்டு காசிடை போட்டு வாயை சாணுக்கு கொண்டு மூடி எருமுட்டை அடுக்கி சுட்டு ஒடு விட்ட பிறகு எடுத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்து நாக்கில் எண்ணெ தடவி மூன்று கருப்பு கட்டி கட்டி உருண்டை பண்ணி முழுங்கவும். மூன்று நாள் முழுங்கவும். குன்மம் கூட்டோடே விழும். இது கை கண்டது.

குமர கண்டத்துக்கு ஆவரை கற்பம்:-

ஆவரை வேர் பட்டை உலர்த்தி இடித்து நித்தம் வெருக் கடி பிரமாணம் தின்ன மூத்திர கிறிசை நிற்கும். இந்த பொடி மோருடன் குடிக்க வயிற்று வியாதி தீரும். இந்த பொடி கஞ்சியுடன் குடிக்க குமர கண்டம் தீரும். இந்தப் பொடி நெய்யுடன் முழுங்க வெள்ளோக்காளம் தீரும். இந்தப் பொடி வெற்றிலையுடன் தின்ன யீளை இருமல் தீரும். இந்தப் பொடி கழுநீருடன் குடிக்கப் பிரமியம் தீரும். இந்தப் பொடி பாலுடன் குடிக்க குடல் வாதம் தீரும். இந்தப் பொடியும் இதில் பூவின் பொடியும் எருமைத் தயிரில் கொடுக்க ரத்தப் பிரமியம் சுக்கிலப்பிரமியம் தீரும்.

மூக்கில் ரத்தம் விழுந்தால் பொன்னுங்கண்ணி வேர் பாலில் குடிக்கவும்.

வலி குன்மத்துக்கு:-

கரிசலாங் கண்ணியும் எழு மிளகும் அரைத்த நெல்லிக்காய் அளவு முழுங்க மீளும். வலி குன்மத்துக்கு சகலச் சும்பு ஒரு பாக்கத்தனை பசுவின் பாலில் கொடுக்க மீளும்.

சூலைவலி குனம் குடல் வாதத்துக்கு:-

பாக்கு வெற்றிலையில் இரண்டு காசுத்தனை எருக்கிலை தின்ன மீளும்.

பிள்ளை குளிசம் கட்ட மீளும். குளி தோஷம் குளித்தவள் எடுத்த பிள்ளைக்கு குளிசம் கட்ட மருந்து:- தண்ணீர் விட்டான் வேரு பிளந்த பாதியும் விடத் தொலாம் வேர் பிளந்த பாதியும் இரண்டும் ~~[illegible]~~ ரா விட்டு கட்டி குளிசங் கட்டி பிள்ளை கழுத்திலு மதாய் கழுத்திலும் கட்டவும்.

பிரமியம் முதலானதுக்கு:-

இளநீர் நாலு படி பசுவின் பால் நாலு படி, பூசணிப் பழச் சாறு நாலு படி, வாழைக் கிழங்கு சாறு நால் படி, பொன்னுங்கண்ணிச் சாறு நாலு படி இது வெல்லரம் ஒன்றாய் கூட்டி சிற்றாமுட்டி வேர் பலம் பத்து இடித்த எழு படி தண்ணீர் வார்த்து இரு நாழியாக காய்ச்சி வடித்துக் கொண்டு இதில் ஏலம், லவுங்கம், அதிமதுரம், இந்துப்பு, முந்திரிகைப் பழம் இவை சமம் கூட்டி நாழி நெய்யில் இரண்டு பலம் விழுக்காடு நிறுத்துக் கொண்டு பால் வார்த்து அரைத்து கரைத்து பசுவின் நெய் ஒரு நாழி விட்டு மூன்று நாள் காய்ச்சி வடிக்கிற போது சட்டியில் அரைப்படி சர்க்கரை போட்டு வடித்து எடுத்து தினம் கரண்டி நெய் நக்க இதுக்கு தீரும். வியாதி மூத்திர கிரிச்சம், அங்க தாகம், தலை உஷ்ணம், காமாலை, சித்த பிரமை, எலும்புருக்கிப் பிறமை யோனி உஷ்ணம், பலதும் தீரும்.

அரக்_கென்ணை:-

வெருகங் கிழங்கு பத்து, அமுக்கிரா வேர் ஐந்து, சித்தா முட்டி வேர் ஐந்து, பேரு முட்டி வேர் ஐந்து, நன்னாரி வேர் இரண்டு இவை பலப்படி நிறுத்து இடித்து மோர் எட்டு காடி எட்டு இந்த பதினாறு படியிலும் இந்த மருந்தை போட்டு இரண்டு வள்ளமாக காய்ச்சி இதிலே அரக்கு படி மூன்றும் நாலு படி தண்ணீர் விட்டு காய்ச்சி இறுத்துக் கொண்டு மடிச்சுப் இரண்டு படி தண்ணீர் வார்த்து ஒரு படியாகக் காய்ச்சி இறக்கி இறுத்துக் கொண்டு பின்னையும் இரண்டு படி தண்ணீர் வார்த்து ஒரு படியாக காய்ச்சி இறக்கி பின்னையும் இரண்டு படி தண்ணீர் வார்த்து ஒரு படியாக காய்ச்சி இறுத்துக் கொண்டு இந்த அரக்கு தண்ணி படி நாலும் முந்திக் காச்சின கசாயம் எட்டுப் படியும் எள்ளெண்ணை படி ஆறு இவை எல்லாம் ஒன்றாக, ஊற்றி இதுக்கு கற்கம் கடுகு ரோகிணி பலம்.1, கிராம்பு பலம் அரை, கொத்தமல்லிகை பலம் ஒன்று, சதகுப்பை பலம் அரை, பூலாங் கிழங்கு பலம் அரை, சிறு நாகப்பூ பலம்அரை அதிமதுரம் பலம் அரை, கோஷ்டம் பலம் அரை, மஞ்சள் பலம் அரை, சுக்கு பலம் அரை, மிளகு பலம் அரை, திப்பிலி பலம் அரை, நற்சீரகம் பலம் அரை, நல்ல சந்தனம் பலம் அரை விலாமிச்சம் வேர் பலம் அரை, வெட்டி வேர் பலம் அரை, பசுவின் பால் படி ஆறு இந்த கடை சரக்கெல்லாம் பால் வார்த்து அரைத்து மிகுந்த பாலில் கரைத்து முந்தின கசாயத்தில் கூட ஊற்றி காய்ச்சி அந்த கடுகு மிளகு பதமானவாறேசளாவிக் காய்ச்சி வடித்து தானியப் புடம் வைத்து அஸ்தியில் பற்றிப் போகாத சுரத்துக்கு ஆறு நாளிடவும். ரத்தச் சாப்பு முரசை உடம்பு வெளிரி இருக்கும். சொறிநித வாய்வு இரண்டு மாதம் உடம்பு இளைத்து அபிகாதம் பிடிச்சது இவை எல்லாம் தீரும்.

ஊற்றி_வருகிற_சுரத்துக்கு_கசாயம்:-

சந்தனம், இருவேலி, விலாமிச்சை தாமரை வளையம், கொத்தமல்லி அதிமதுரம், கோஷ்டம், ஏலம்,, திப்பிலி, நன்னாரி வேர், சிறுவழுதலைத் ~~தூ~~ தூதுவளை வேர், நெருஞ்சி வேர், முத்தக் காசு, முளக் காவளை இவை எல்லாம் சமன் கூட்டி ஞாளாக்கி நாள் ஒன்றுக்கு வெரு கடி பிரமாணம் இரு நாழி நீரிலே போட்டு கடுக்காயும், போட்டு உழக்காக காய்ச்சி குடிக்க எல்லா சுரமும் தீரும்.

பெருவுடையார்_இளைப்புக்கு_மருந்து:-

காசு பலம் அரை, வெள்ளை பாஷாணம் பலம் ஒன்று, மடல் துத்தம் கழஞ்சு கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு குளிர் வருகிற போது ஒரு உருண்டை மோரில் இடவும். யழந் தண்ணீரில் இடவும். ----- நாவல் கொழுந்து மோரில் அரைத்துக் குடிக்கவும்.

குடிநீர்:-

நாய் வேளை வேர், சுக்கு, கடுக்காயும், குடி நீரிடவும். நாள் ஒன்றுக்கு உழக்கு நீர் கொடுக்கவும். -----

மண் படாத எருமுட்டை மேலாக செதுக்கி இடித்துத் தெள்ளிப் பொடி போட்டு கொடுக்கவும். வெந்த புண்ணும் ஆரும்.

வெள்ளெள்ளு புண்ணுக்கும், கற்றாளை மடலும் சோறும் காடியில் அரைத்துப் பூச வெந்த புண்ணும் ஆரும்.

காமாலைக்கு:-

கீழ நெல்லி சமூலமும், வெள்ளுள்ளியும், மிளகும் கூட்டி அரைத்து பசுவின் பாலில் கரைத்து கொடுக்கவும். பசுவின் சாணியும் எலுமிச்சங்காய் அளவு மெல்லிய சீலையில் கட்டி எருமை தயிர் பிசைந்து வடித்த மூன்று நாள் கொள்ளவும். ~~தயிரில்~~ மூன்று நாள் கண்ணுக்கு அஞ்சனம் மருந்து: சிற்று மணக்கு விரை முலைப் பால் வார்த்து கலந்து பிறகே தேய்ச்சு கண்ணிலிட மூன்று நாள் இடவும் காமாலை என்பட்டது தீரும்.

******

சு.சு:25.3.63.

முற்றும்.

299